

பாடுகள் இங்கே !

# தொண்டன்

ஆரம்பம்: 1969–பெப்ரவரி

உயிர்ப்பு எங்கே?

பெப்ரவரி - 2008 சமய – சமூக – இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


பெப்ரவரி - 2008

மலர்: 40 இதழ்: 01



**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்



**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்



**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 01 |
| மனமாற்றம்... | : | 02 |
| கிறிஸ்து ஒரு சுமை தாங்கி... | : | 03 |
| இயேசுவே! உண்மையை... | : | 04 |
| புனித பவுலின் 2000ம் | : | 06 |
| இலக்கிய மஞ்சரி... | : | 07 |
| 2000ம் வருடம் காணும்... | : | 08 |
| அரசியல்... அரசியல்.... | : | 09 |
| மாணவர் பக்கம்... | : | 12 |
| தொண்டனின் சில நிமிடங்கள்.. | : | 13 |
| கடுகுக் கதை... | : | 15 |
| புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியல்... | : | 16 |
| சிலுவைக்கு வந்த... | : | 17 |
| போர்க்களத்தில் என் செபம்... | : | 20 |
| சாவு தந்த நோவுகள்... | : | 21 |
| கவிஞர் ஆ. மு. சி வேலழகனின்.. | : | 22 |
| கண்டுபிடித்தது யார்?... | : | 24 |
| ஒளி ஏற்றுவோம்... | : | 25 |
| விவிலியம் கற்போம் | : | 27 |
| அறிவை வளர்ப்போம் | : | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486


விலை : 20/=

ஆண்டு சந்தா : 350/=

(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

மீண்டும் ஒரு தவக்காலம். 'மனம் மாறுங்கள்! மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்! தவக்காலத்தின் அடிநாதமாகவுள்ள 'மனமாற்றம்' என்னும் குரல் காத்திரமாவே ஒலிக்கிறது. 'மாற்றம்' என்பது ஒரு பிரபஞ்சத் தத்துவம். இடைவிடாத மாற்றந்தான் பிரபஞ்சத்தின் இருப்பை நிலைநிறுத்தியுள்ளது. நம் உடலும் சரி, உலகமும் சரி இதற்கு விதிவிலக்கல்ல. உடலின் கலங்கள் மாற்றத்தை இழக்கும்போது உயிரற்ற பிணமாகிவிடுகிறது. புறத்தே நிகழும் இம்மாற்றம் அகத்திலும் நிகழ வேண்டும். அகம், புறம் என்பது நமது புரிதலுக்காக நாம் வகுத்துக்கொண்டதே அன்றி வாழ்க்கை என்பது இரண்டையும் உள்ளடக்கியதே. அதனால்தான் 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்கிறார் திருமூலர். அகத்தில் ஏற்படும் மாற்றம் புறத்தே நிகழும் போதுதான் அம்மாற்றம் முழுமை பெறுகிறது. ஆனால் கடமைக்காக, காட்சிக்காக, சடங்காக புறத்தே செய்யப்படும் மாற்றம் போலியானது. 'உங்கள் உடைகளை அல்ல உள்ளத்தைக் கிழியுங்கள்.' விவிலிய வார்த்தைகள் சாட்டைகளாக விழுகின்றன. தவக்காலம் மனமாற்றத்தின் வழி ஒரு மறுபிறப்புக்கு அழைப்பு விடுக்கிறது. குற்றங்களை, குற்றச் சார்புகளை, அநீதிகளை, ஆக்கிரமிப்பு நிறைந்த அழுங்குப் பிடிவாதங்களைக் கிழித்து உண்மையில், நீதியில், மனிதாபிமானத்தில், அன்பில் பிறக்கும் மாற்றம் நிகழட்டும். 'ஏற்கனவே அடிமரத்தில் கோடரி வைத்தாயிற்று' இன்னும் காலம் தாழ்த்துவது, அநீதியின் வழியே அட்டகாசமாக நடை போட முயல்வது நமக்கும் சரி, இந்த நாட்டுக்கும் சரி நன்றன்று; நலந்தருவது அன்று.

—இணை ஆசிரியர்



## இறைவாக்கு

"என்னைவிட்டு விலகிய மக்களே! திரும்பி வாருங்கள்;
உங்கள் நம்பிக்கையின்மையிலிருந்து
உங்களைக் குணமாக்குவேன்."

(எரே: 3:22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமாற்றம்

நாம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம் என்பவற்றைச் சிந்திக்கும் தவக்காலத்தில் மனமாற்றத்தைப் பற்றிச் சிந்திப்பது சாலச்சிறந்த தாகும்.

மாற்றத்தைப் பற்றிப் பொதுவாகப் பேசும் போது, மனிதவாழ்வில் மாற்றம் இல்லாத இடமே இல்லை என்று கூறலாம்.

ஹேரா கிளீட்டஸ் எனும் மெய்யியலாளர் கூறுவார் "ஓடுகிற நதியில் இருமுறை கால் வைக்க முடியாது" என்று. ஒரு தடவை காலை வைத்துவிட்டு, மறு தடவை காலை வைக்கும் போது, நாம் முன்பு வைத்த நதியில் அல்ல, மாறாகப் புதிய நதியில் அதாவது ஓடும் நீரில் காலை வைக்கிறோம். வாழ்க்கை என்னும் நீரோட்டத்தில் எத்தனையோ மாற்றங்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது. உடல் அமைப்பில் மாற்றம், வயது செல்லச் செல்ல உடையில், உணவில் மாற்றம், தேர்ந்தெடுக்கும் நண்பரில் மாற்றம், உறைவிடத்தில் மாற்றம், சிந்தனையில் மாற்றம், உணர்வில் மாற்றம். இவ்வாறு மாற்றம் எம்மோடு பின்னிப் பிணைந்துள்ளது.

இப்படியாகப் பின்னிப் பிணைந்திருக்கும் மாற்றங்களுக்கு எம் வாழ்வில் இடம் கொடுக்கா விட்டால் என்ன நிகழும்? சற்று சிந்தித்துப் பாருங்கள்! என்வாழ்வில் மாற்றங்களுக்கு இடம் கொடுக்கா விட்டால் எனது வாழ்வு எவ்வாறு இருந்திருக்கும்? மாற்றங்களுக்கு இடமளிக்காவிட்டால் வாழ்க்கையில் வளர்ச்சி அடைந்திருக்க முடியாது. உடல், உள, சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கு இடம் கொடுக்காவிட்டிருந்தால் நாட்டில் அல்லது உலகில் ஏற்படுகின்ற சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு நம்மால் ஈடுகொடுக்க முடியாதிருந்திருக்கும். நவீன உபகரணங்கள், கருவிகளுக்கு நாம் இசைந்து கொடுக்காவிட்டிருந்தால் நாம் மிகவும் பரிதாபத்திற்குரியவர்களாகவே காணப்பட்டிருப்போம்

இம்மாற்றத்தை எமக்குள் எடுப்பது ஒரு கடினமான விடயமே. ஆயினும் அதனை எடுக்க வேண்டும். எடுத்தாலொழிய வளர்ச்சியை நம்மில் நாம் காணமுடியாது. பழைய பாத்திரத்தினுள் புதிய திராட்சை இரசத்தை ஊற்றி வைக்க முடியாது. அதே போன்று புதியனவற்றை நாடி நிற்கும் பயணத்தில் புதிது புதிதான செயற்பாட்டில் ஈடுபட மாற்றம் இன்றியமையாததாகும்.

மனமாற்றத்தைப் பொறுத்தவரையிலும் மேற்கூறிய யாவும் பொருந்தும். ஒருவர் ஒரு கணப்பொழுதில் மனம் மாறிவிடுவதில்லை. இது தொடர்ச்சியாக நிகழ்வது, அத்துடன் இது தொடர்ச்சியான வளர்ச்சிப்படியில் இட்டுச் செல்கிறது. "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்பது இயேசுவின்போதனையின் அச்சாணியாக இருக்கிறது. அதற்கிணங்க மனமாற்றத்தை நோக்கிய எமது பயணத்தில் கிறிஸ்து பிறப்புக் காலமாக இருக்கலாம், தவக்காலமாக இருக்கலாம், பாஸ்கு காலமாக இருக்கலாம், எல்லாக் காலங்களிலும் சிறப்பான அழைப்பு விடுக்கப்படுகின்றது, இம்மனமாற்றத்திற்கேயாகும்.

மனமாற்றம் என்பது ஆன்மீக வாழ்வில் ஆழப்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சி, ஒரு வளர்ச்சி. பழைய பாவ வாழ்வை விடுத்து, ஆண்டவருக்கு உகந்த வாழ்வு வாழ்வேன் என்று உறுதிகொள்வதனூடாக ஆண்டவருடன் உள்ள உறவை ஆழப் படுத்துவதோடு மாத்திரமின்றி அன்றாட வாழ்வையும் புத்துணர்ச்சியுடனும், புது ஆர்வத்துடனும், நம்பிக்கையுடனும், வீரியத்துடனும் எடுத்துச் செல்வதேயாகும். மாற்றம் இல்லாவிட்டால், ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியைக் கொணர முடியாது. இன்று நாம் காணும் கொலை, கொள்ளை, களவு, வஞ்சகம், சூது இவையனைத்திற்கும் அடிப்படைக் காரணம் அடிமட்டத்தில் மனமாற்றம் இல்லாமையேயாகும்.

நாம் தொடங்கியுள்ள தவக்காலத்தில் எவ்வித மாற்றமும் எம் வாழ்வில் ஏற்படுத்தாமல் போகப் போகிறோமா? அல்லது மாற்றத்தினூடாக இறைவனோடு, அயலவரோடு நாம் உறவு கொள்ளப் போகிறோமா? எல்லாமே நன்மையானதை நோக்கி மாற்றம் பெற வேண்டும் என்று இறைவன் நினைக்க நான் மட்டும் இதற்கு விதிவலக்காக இருக்கப் போகிறேனா? சிந்தித்து செயற்படுவோம்

**– அருட்தந்தை அன்ரன் டெரன்ஸ் றாகல் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்து ஒரு சுமை தாங்கி



ஏதேன் தோட்டத்தில் ஒரு நாள் - தேவன்
கட்டளையை மீறினான் மனிதன் - அவன்
பாவங்களைச் சுமக்கப் பிறந்த கிறீஸ்து ஒரு சுமை தாங்கி

பாவங்கள் கடலலையாகப் பரவி இந்தப்
பாரினை அழித்திட்ட வேளை அதன்
பாரத்தை நீக்க வந்த கிறீஸ்து ஒரு சுமை தாங்கி

பாதை தவறிய மாந்தர்தம்
பாவத்தை அழிக்க உலகில்
பரமனே உலகில் உதித்தது
பாவங்களை எமக்காய்ச் சுமந்தது

இன்றும் என்றும் இவ்வுலகில்
விளையும் பாவப் பயிரதனை
என்றும் தாங்கிப் பழிசுமந்த
கிறீஸ்து ஒரு சுமை தாங்கி

பட்டம் பதவிப் பணத்துக்காய்த் திரியும் மானிடர்க்கு
சட்டமாய் ஒரு கணை தொடுத்தார்
இட்டம் போல் பாவங்கள் புரிந்த மானிடர்க்கு
சட்டமாய் வாழ்ந்து தம் உயிர் தந்த கிறீஸ்து ஒரு சுமை தாங்கி

மணி மகுடம் தாங்கி இவ்வுலகினை
ஆள வேண்டிய இறைமகன் இயேசு
எமது பாவங்கள் அனைத்தையும் சுமந்து
நிமிர்ந்து நின்ற சுமை தாங்கி

சிலுவையில் மரித்து உயிர்த்துத்தம் மாட்சியை
மூலைமுடுக்கெல்லாம் ஒளிரச் செய்து
நிறைவாழ்வளித்த கிறீஸ்து ஒரு சுமை தாங்கி

- றோஸ் ஜோசப் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவே! உண்மையைச் சொல்லும்....

## மாறுபட்ட கருத்துகளை சொல்லியிருக்கிறீரே



அருட் சகோ. எஸ். ஏ. ஐ. மந்தி! F. C

நான் நல்லவன். நான் சட்டங்களை எல்லாம் நன்கு கற்றவன். யூத குலத்தில் தோன்றிய மிகப்பெரிய மனிதர் மோயீசன் என்பதை யூதர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அவரது பத்துக் கட்டளைகளையும் அனுசரிப்பவன் நான். லேவியர் ஆகமத்தில் கூறப்படுகின்ற குரு பரம்பரையினரின் நுணுக்கமான கோயில் சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங் களையும் மிக நுணுக்கமாகக் கடைப்பிடிக்கின்றவன் நான். என் வாழ்வை யூத சட்டதிட்டங்களுக்கே அளித்து சட்டத்தில் நிபுணத்துவம் அடைந்துள்ளேன்.

கோவிலிலே என்னுடைய செபத்தை ஏன் நீர் குறை கூறினீர்? லூக்காஸ் நற்செய்தியிலேயே 18ம் அதிகாரத்தில் நீர் மக்களுக்குக் கூறிய கதை அதுவும் என்னைப் பற்றி மிகவும் அவதூறாகக் கூறிய கதை என்னை மிகவும் வேதனைப்படுத்துகிறது. பிறர் முன்னிலையில் என்னை அசிங்கப்படுத்தி அவமானத்தை அள்ளித் தந்துவிட்டீர்.

அப்படி என்ன குற்றம் நான் செய்துவிட்டேன்? கடவுளே!, கள்வர், அநீதர், விபசாரர் போன்ற மற்ற மனிதரைப் போலவோ, சுருக்கமாக இந்த ஆயக்காரனைப் போலவோ நான் இராதிருப்பதற்காக இறைவனுக்கு நன்றி செலுத் துகின்றேன்.

ஏன் நன்றி செலுத்துகின்றேன்? இறைவனின் அருள் இரக்கத்தினால் தான் என்னால் இவ்வாறு வாழ முடிந்தது. வாரத்திற்கு இருமுறை நோன்பிருக்கிறேன். எனக்கு ஏராளமான வருமானமுண்டு. பணக்காரர்கள் பொதுவாகப் பணத்தைச் செலவு செய்யமாட்டார்களே! மேலும் மேலும் தம் பணத்தை அதிகரித்து, அவ்வதி கரிப்பைக் கண்டு மனம் பூரிப்படைந்து பணத்திலேயே காதல் கொண்டு, வெறி கொண்டு வாழ்கிறார்கள் என்பது உமக்குத் தெரியுமே? அப்படியிருக்க நானோ எனது ஏராளமான வழிகளில் சுருக்கமாகக் கூறுவதாயின் எனது வருவாயில் எல்லாம் 1/10 சட்டப்படி கொடுத்துவிடுகிறேனே.

இருந்தும் என்னுடைய செபத்தையும் என்னையும் கண்டித்துப் பேசியது எனக்கு மிகவும் மனவருத்தமாக இருக்கிறது.

மற்றொரு தடவை இன்னொரு கதையையும் கூறினீர். இதுவும் எனக்குத் தெரியும். 10 தாலந்துகளைப் பெற்றுக் கொண்டவன் மேலும் 10ஐ சம்பாதித்தான். இவன் கடினமான வியாபாரியாக இருக்க வேண்டும். அவனுக்குப் பணத்தைக் கொடுத்து அரசன் அவனைப் பத்து ஊர்களுக்கு அதிபதியாக்கினான் எனப் புகழ்ந்தீர். ஐந்து தாலந்துகளை இருமடங்காக்கிய இன்னொருவனை 5 ஊர்களுக்கு அதிபதியாக்கியதையும் புகழ்ந்தீர். ஆனால் ஒன்றை மட்டும்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரே ஒரு தாலந்தைப் பெற்றவன் அதைப் பத்திரமாகத் திருப்பிக் கொடுத்ததற்கு அவனது நாணயத்தைப் பொருட்படுத்தாது அவ்வரசன் அதை அவனிடம் இருந்து பிடுங்கி எடுத்து முன்பு சொன்ன வியாபாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியீட்டிய மற்ற இருவருக்கும் பகிர்ந்தளித்த அரசன் தன் செயலை நியாயப்படுத்தியதை நீர் கூறவில்லையா?

இதனாலும் இதுபோன்ற உமது வேறு சில முரண்பட்ட போதனைகளை என் சட்ட அறிவின் பின்னணியிலேயே அலசிப் பார்த்தேன். ஏன் இந்த மாறுபட்ட கருத்துகள்? நன்கு வாழ்க்கையைக் கடைப்பிடிக்கும் என்னை உதாசீனப்படுத்தி, மாறாக எம்மை மிகவும் வன்முறையாக ஆட்சி செலுத்தும் உரோமர்களின் பொக்கிஷ அறைகளை நிரப்புவதற்கு, வரிகளை அறவிடுவதற்கு குத்தகை பெற்று தாமும் செல்வத்தில் வளர்ந்து நம் மக்களை அதிலும் உம் இரத்தத்தின் இரத்தமாகிய யூத மக்களைக் கொடுமைப்படுத்தி யூதர்களுக்கு எதிராகச் செயல்படுகின்ற, வரி அறவிடுவதில் தம் வாழ்நாளையே கரைத்துக் கொண்டிருக்கும், கரைத்துக்கொள்ளும் ஆயக்காரனை வெகுவாகப் புகழ்ந்துவிட்டீரே?!

ஆகவே உமது பார்வையில் நல்லவனாகிய நான் தீயவன்; தீமையே செய்யும் ஆயக்காரன் நல்லவன். சட்டத்தின் முன் உம்மை ஏன் குற்றவாளியாகக் கருத முடியாது? மௌனம் சாதிக்காமல் விரைவாகப் பதில் கூறும்.

## இயேசுவின் பதில்

உமது கேள்வி உமக்கு நியாயமானதாகத் தோன்றலாம். உம்மோடு ஒத்த பலரும் உமது கேள்வியை நியாயப்படுத்த முற்படுவார்கள். நான் உம்முடைய வாழ்க்கை முறையில் குற்றம் சாட்டவில்லை. ஆனால் உம்முடைய செபத்திலேயே குறையுண்டு. நீர் பலர் முன்னிலையிலேயே இப்படித்தான் செபித்துள்ளீர். நான் பாவிகளைப் போல் அல்லன், நல்லவன் என்று உமக்கு நீரே சாட்சியங்கள் கூறியுள்ளீர். பிறரை இழிவுபடுத்தியுள்ளீர். இது உமது மனப்பாங்கு. உம்மால் நன்கு சிந்திக்க முடியும். சட்டங்களைக் கரைத்துக் குடித்தவர் நீர் என்பதிலும் சந்தேகமில்லை.

"நான் நல்லவன், செபம் சொல்ல வந்த இந்த ஆயக்காரன் பாவி என்று ஆண்டவன் சன்னிதானத்தில் நீர் ஆயக்காரனை இழித்துரைப்பதற்கு உம்முடைய பழைய சட்டங்கள் இடம் தரலாம். அது பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்ற சட்டம். நான் வழங்கிய புதிய சட்டத் தொகுப்பு நீர் நன்கு படிக்க வேண்டியவைகள். எனது நீதி மற்றவனைக் குறை கூறாதே. ஏனென்றால் நீர் மற்றவர்களிடம் காணும் குறைகளை விட உன்னிடம் நிறையக் குறைகள் இருக்கலாம். இதனாலேயே உன் கண்ணில் பெரியதொரு மரம் போன்ற பொருள் (உத்தரம்) முட்டிக்கொண்டிருக்க அதைவிட்டு உனது பக்கத்திலிருப்பவனின் கண்ணிலுள்ள துரும்பை அகற்ற முற்படுகின்றாய் என்ற என்னுடைய புதிய நியாயச் சட்டங்களைப் படித்துப்பார்.

நான் மேலும் கதைகள் மூலம் சொன்னவற்றை நீர் கேட்டுள்ளீர். நூறு ஆடுகளை வைத்திருந்த ஒருவன் ஓர் ஆட்டுக்குட்டியை இழந்தால் அதைத் தேடிப் போவான். அதைக் கண்டடைந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைவான். தன்னிடம் ஏற்கனவே உள்ள 99 ஆடுகளுக்காக அவன் சந்தோஷப்பட்டாலும் அந்த ஒன்றை அவன் இழக்க விரும்பவில்லை. இப்படிப் பல கதைகளை நான் கூறியிருக்கிறேன்.

இழந்தவர்களைத் தேடித்தான் நான் வந்தேன். ஊதாரிப்பிள்ளை பற்றிய கதையைச் சீர்தூக்கிப் பார். உன்னைப்போன்ற பல பரிசேயர்கள் பல்லாண்டுகள் சட்டத்தைப் படித்தவர்கள், மனித நேயம் இல்லாமல் போய்விட்டார்களே. நான் வற்புறுத்துவது மனிதநேயம் மட்டுமல்ல உலக நேயமும் கூட.

கனிதராத அத்திமரத்தை நான் சபித்த பொழுது எனது சீடர்கள் அதற்குத் தாங்கள் எரு இட்டு (பசளையிட்டு) இன்னும் சிறிதுகாலம் அதைப் பராமரித்த பிற்பாடு தீர்ப்பு வழங்கலாம் என்றனர். இதிலிருந்து இயற்கையையும் நான் பராமரிக்க வேண்டுமென்பது உங்கள் சட்டத்தொகுப்பில் உண்டு. ஆனால் நீங்கள் அவற்றை கைவிட்டு விட்டீர்கள்.

உன்னோடு கோவிலுக்கு வந்த ஆயக்காரன், தான் பாவியென்று தன்னைத் தாழ்த்திக்கொண்டான். பிறர் உங்களுடைய நல்ல செயல்களைப் பார்க்க வேண்டும் என்று நீங்கள் செய்யவேண்டாம். உங்கள் அறைக்கதவுகளைப் பூட்டிக்கொண்டு உங்கள் பரமபிதாவிடம் கேளுங்கள் என்று நான் போதித்தது உன்னைப் போன்றவர்களுக்கு ஒரு சவால்தான்.

உன்னைப் போன்றவர்களின் பணத்தையும், பகட்டையும், அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு நீங்கள்தான் ஏழைகளுக்கு அநீதி செய்கிறீர்கள். உங்களுடைய அநீதிகளைப் பாதுகாக்கும் கவசம் சட்டங்களே. ஆயக்காரன் உரோம சாம்ராஜ்ஜியத்தின் ஓர் உத்தியோகத்தன் மட்டுமே. உரோமர்களின் சட்டப் பிரகாரம் அவர்கள் வரிகளை அறவிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? சட்டத்தின் அறிவுமட்டும் போதாது. சட்டங்களின் பிரயோகத் தெளிவும் தேவை. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஒருவன் தவறு இழைக்கிறான். யாருடைய தூண்டுதலினாலோ ஒருவன் தவறு செய்கிறான். வறுமையின் காரணமாகக் களவு செய்கிறான். ஆகவேதான் பல சந்தர்ப்பங்களில் நான் மன்னிப்பைப் பற்றி வலியுறுத்தியுள்ளேன். ஏனென்றால் அவர்கள் அறியாமல் செய்கிறார்கள்.

### பரிசேயனின் குறுக்கீடு

பெரும் போதகரே! இப்பொழுது எனது உள்ளத்தில் தெளிவு ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் அடிக்கடி கூறுவீர்களே ஒரு கூற்று, தூய ஆவியான இறைவன் உங்களுக்கு ஒளியைத் தருவான், அமைதியைத் தருவான். ஆம்! நானும் ஓர் உள்ளொளி பெற்று விட்டேன். எவ்வளவோ படித்திருந்தும் நான் இருளிலேயே இருந்திருக்கிறேன். இந்த உள்ளொளி எவ்வளவு மகத்தானது, மகிழ்ச்சியானது. என் இதயம் பெருமகிழ்ச்சி அடைந்துவிட்டது. இதற்குத் தான் பக்தன் ஒருவனுக்கு ஞானம் வரவேண்டும் என்று சாலமன் முதலான இறை பக்தர்கள் சங்கீதங்கள் மூலம் மீண்டும் மீண்டும் முழங்கியிருக்க வேண்டும். இயேசுவாகிய பரமகுருவே! இருகரம் கூப்பி மனமும் அறிவும் ஒத்து இன்னமுது படைத்து நின்தாழ் பற்றினேன். நீர் பற்றற்றவர்

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

ஒரு சுயநல நோக்கத்தைக் கொண்டு எந்தத் தர்மம் செய்தாலும் அது வெறும் ஆடம்பரம்தான், அறமாகாது. மனத்தில் குற்றமான நோக்கமில்லாமல் செய்கிற நல்ல காரியம்தான் அறம்; அதுவே செபம்.

இப்பொழுது நான் தெளிவு பெற்றுவிட்டேன். பத்துத் தாலந்துக்கதையும் விளங்கிவிட்டது. விடாமல் முயற்சி செய்யக் கூறுகிறீர். எவனிடம் திறமை, நன்மைத்தனங்கள் இருக்கின்றனவோ, கொடுக்கப் பட்டனவோ அது மற்றவர்களுக்குப் பலதாக, பலவாறாகப் பயன்படவேண்டும். இப்பொழுது புரிகிறது எனக்கு.

## புனித பவுலின் 2000ம் ஆண்டு பிறப்பு விழா



திருத்தந்தை 16 ம் பெனடிக்ற் புனித பவுலுக்காக ஒரு ஜூபிலி ஆண்டினை அறிவிக்க முடிவு செய்துள்ளார். திருத்தந்தையின் எண்ணப்படி அந்த ஜூபிலி ஆண்டு 2008 ஜூன் தொடக்கம் 2009 ஜூன் வரை விரிந்து, அப்புனிதரின் 2000ம் ஆண்டு பிறப்பு விழாவினை உள்ளடக்கியிருக்கும்.

திருத்தந்தையின் அறிவித்தலின்படி விழா ஆண்டு பல சிறப்பு வழிபாடுகளைக் கொண்டிருக்கும். பல நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கும். ஆயினும் அவைகள் உள்ளூர் வழிபாட்டு நிலையங்களிலும், ஆலயங்களிலும் கொண்டாடப்பட வேண்டும். பவுலோடு தொடர்புடைய ஆலயங்களும், வழிபாட்டு நிலையங்களும் சிறப்பு நிகழ்ச்சிகளைக் கொண்டு அமைய வேண்டும்.

சிறப்பான முறையில் பவுல் ஆண்டானது கிறீஸ்தவ சபைகளுக்கிடையேயான ஒன்றிப்பு ஆண்டாக அமைய வேண்டும். எல்லாக் கிறீஸ்தவர்கள் மத்தியிலும் ஒற்றுமையும் ஈடுபாடும் ஏற்பட பவுல் உழைத்தமையை திருத்தந்தை நினைவூட்டினார்.



அரிசிவிலை ஆகாயம் ஏறிப்போச்சு
மாவிலையும் மலையுயரம் போயேயாச்சு
ஏ. கே. யும் ஏவுகணை(யும்) இன்னும் பல இருக்கையிலே
ஓ. கே. தான், உயிர் வாழப் பஞ்சமேது!

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

அண்மையில் அருட்தந்தையொருவர் தனது மறையுரையில், பிள்ளைகட்கு பெயர் வைக்கும் விடயம் தொடர்பில் தனது மனக்குறையை வெளிப்படுத்தியிருந்தார். திருமுழுக்கு தொடர்பான அவரது மறையுரை யானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

ஒரு குருவானவர் திருமுழுக்கு கொடுக்கவிருந்த பிள்ளையின் பெயர் பயஸ் படையப்பா என்றிருந்தது. அவர், பிள்ளையின் தகப்பனாரிடம் 'ஏன் இப்படியான பெயரை வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டாராம். அதற்கு தகப்பனார் சொன்ன பதில் 'என் மூத்த பிள்ளையின் பெயர் பாத்திமா பாட்ஷா. மற்றைய பிள்ளையின் பெயர் ஆரோக்கியசாமி அருணாச்சலம்' குருவானவர் விக்கித்துப்போனார், தகப்பனார் ரஜனி ரசிகர். முன்பெல்லாம் பிள்ளைகட்கு புனிதர்களின் பெயர்களை வைத்தார்கள். இப்போதெல்லாம் திரையுலகம் தொடர்பான பெயர்களை வைக்கின்றார்கள்.

இது இவ்விதம் இருக்க இன்னொரு உண்மைச் சம்பவம். பொலனறுவை மாவட்டத்தில் பின்தங்கிய முஸ்லிம் கிராமமொன்று. அங்கு மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிலர் அக்கிராமத்தின் பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் அனுபவம் இது. குறிப்பிட்ட பாடசாலையில் முதலாம் தரத்தில் சேர்த்துக்கொள்வதற்காக ஒரு பிள்ளையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பிள்ளையின் பிறப்பத்தாட்சிப் பத்திரம் முற்றுமுழுதாக சிங்களத்தில் இருந்திருக்கின்றது. பிள்ளையின் பெயர் என்ன வென்று அதிபர் கேட்டிருக்கின்றார். தகப்பனார் 'பாத்திமா பீபீ' என்று சொல்லியிருக்கின்றார். ஆனால் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் 'அதான்' என்றுதான் பெயர் பதிவாகியிருக்கின்றது. தகப்பனாரோ தான் சொன்னதுதான் சரியென்று வாதிட்டார். என்ன நடந்திருக்கின்றது தெரியுமா? தகப்பனாருக்கு சிங்களம் தெரியாது, பதிவாளருக்கோ தமிழ் தெரியாது. பிள்ளையின் பெயர் என்னவென்று கேட்டபோது 'பாத்திமா பீபீ' என்றுதான் தகப்பனார் சொல்லியிருக்கின்றார். பதிவாளருக்கு விளங்க வில்லை. என்ன பெயர் என்று மீண்டும் சிங்களத்தில் கேட்டிருக்கின்றார். அதான் மாத்தையா பெயர் என்று தகப்பனார் சொல்லியிருக்கின்றார். பதிவாளரும் 'அதான்' என்று பெயரைப் பதிந்து விட்டிருக்கின்றார். மொழி விளங்காப் பிரச்சினை பெயர்ப்பிரச்சினையாக உருவெடுத்துவிட்டது.

மொழி விளங்காப் பிரச்சினை கோயில் பிரச்சினையாகவும் மாறிய சம்பவம் ஒன்றும் உண்டு. 1983 ஆடி இனக்கலவரம் இடம்பெற்றபோது தென்னிலங்கையுட்பட நாட்டின் பல பகுதிகளி லிருந்தும் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வடக்கு, கிழக்குப் பகுதிகட்கு வந்தார்கள். அதில் கொழும்புப் பகுதியைச் சேர்ந்த நாகரீக குடும்பங்கள் முதல் தடவையாக தமிழ் மண்ணில் கால் பதித்திருந் தார்கள். அவர்களின் நுனிநாக்கில் ஆங்கில மொழி தான் நர்த்தனமாடும். இவ்வாறான குடும்பத்தைச் சேர்ந்த சில பெண்கள் சிவாலயம் ஒன்றில் வழிபடச் சென்றிருந்தார்கள். அங்கே குருக்கள் பூசை வழிபாடு செய்துகொண்டிருந்தார். அப்பெண்கள் குருக்களிடம் அர்ச்சனைத் தட்டை கொடுத்திருக்கின்றார்கள். குருக்களும் பெண்களிடம் பெயர், நட்சத்திரம் என்பவற்றைக் கேட்டிருக்கின்றார். ஆனால் அவர் கேட்டபோது பெண்களுக்கு விளங்கவில்லை. Pardon (திரும்பவும் சொல்லுங்கள்) என்று கேட்டி ருக்கின்றார்கள். குருக்களும் அதுதான் பெயர் என்று நினைத்துவிட்டார் போலும் 'பாடின் நம ஓம்' என்று அர்ச்சனை செய்திருக்கின்றார்.

முன்பு ஐ.ரி.என் அலைவரிசையில் 'மைன்ட் யுவர் லாங்கியூவேஜ்' (Mind your language) என்ற தொடரொன்றை ஒளிபரப்பி வந்தார்கள். அருமையான நிகழ்ச்சி. ஆங்கிலம் படிப்பதற்காகப் பல்வேறு நாடுகளில் இருந்து இங்கிலாந்து வந்த மாணவர்களின் வகுப்பறை நடவடிக்கைகள் தொடர்பான நகைச்சுவையுடன் கூடிய தொடர் அது. அதில் ஒரு காட்சி. அதிபர் அறைக்குள் சீக்கிய மாணவரொருவர் மரியாதையுடன் நுழைகின்றார். அதிபர் அன்புடன் 'டேக் யுவர் சீட்' (Take your seat) என்று சொல்ல, உடனே அச்சீக்கிய இளைஞன் பயபக்தியுடன் கதிரையைத் தூக்கிக்கொண்டு நிற்பார். சுமார் இருபத்தைந்து, முப்பது வருடங்கட்கு முன்பு ஒளிபரப்பான தொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது தேசிய தொலைக்காட்சியில் 'நேத்திரா' என்ற அலைவரிசை ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது. ஆனால் அதே அலைவரிசையில் 'ஐ' அலைவரிசையும் திடீரெனத் தோன்றுகின்றது. கிறிக்கட் வந்தால் 'நேத்திரா' மறைந்து 'ஐ' வந்துவிடும். பேசாமல் 'ஐ' யாகவே இருந்திருக்கலாம். அல்லது 'ரூபவாஹினி', 'ஐ', 'நேத்திரா', என்று வெவ்வேறான மூன்று அலைவரிசைகள் ஒரே நேரத்தில் செயற்படவேண்டும்.

தங்கர் பச்சானின் இன்னொரு காவியம் திரையிடப்பட்டுள்ளது. 'ஒன்பது ரூபா நோட்டு'. நடிகர் சத்தியராஜின் இன்னொரு பரிமாணம் வெளியே கொண்டுவரப்பட்டுள்ளது. 'செங்கையாழியானின்' கதைகளைப்போல் அப்படியே யதார்த்தம். பார்க்க வேண்டிய 'லிஸ்டில்' சேர்த்துக்கொள்ளுங்கள்.

# 2000ம் வருடம் காணும் தூய பவுல் திருத்தூதர்

இவ் வருடம் எமது கத்தோலிக்கத் திருச்சபையானது தூய பவுலின் இரண்டாயிரமாம் ஆண்டு விழாவைச் சிறப்பிக்கிறது. "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்ற கூற்றுக்கிணங்க இவரைப்பற்றி அறியும் போது, இவரது வாழ்வும் அவ்வாறு அமைந்துள்ளது என்பது புலனாகிறது. பென்யமின் குலத்தைச் சேர்ந்த யூதக் குடும்பத்தில் கி.பி. 10ம் ஆண்டளவில் பிறந்த சவுல், சிலிசியா மாநிலத்தின் தர்சு நகரில் செல்வமும், செல்வாக்கும் நிறைந்த உரோமைக் குடியுரிமை கொண்ட குடும்பத்திலே வளர்ந்து வந்தார். இயேசுவுடன் இணையாமல், சீடராக வலம் வராமல் அவரால் ஏற்பட்ட கிறிஸ்தவத்தை அழிக்கத் திரிந்தவர், பவுலாகியது மட்டுமல்லாமல் திருத்தூதர்களில் ஒருவராகவும் கணிக்கப்படுகிறார் என்றால், மேற்கூறிய கூற்று மிகவும் பொருத்தமாகிறது அல்லவா?



டமாஸ்கசிலுள்ள கிறிஸ்தவர்களைக் கைது செய்யப் புறப்பட்டுச் சென்ற வேளையில் இடைமறித்த வெளிச்சமொன்றால் தாக்குண்டு நிலத்தில் வீழ்ந்தபோது "சவுலே! சவுலே! ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்ற குரலைக் கேட்டு, "ஆண்டவரே நீர் யார்?" எனக் கேட்க, அந்த ஒலியும் பதிலாக "நீ துன்புறுத்தும் இயேசு" என்றது. சவுல் "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்" எனக் கேட்க, அந்த ஒலியும் "நகருக்குள் செல், உனக்கு என்ன செய்யவேண்டும் எனக் கூறப்படும்." என்று பதிலிறுத்தது. இவர் கண்விழிகள் பார்வையற்றுப் போனதால், உதவியாளருடன் நகருக்குள் நுழைந்தார். மூன்று நாட்களுக்குப் பின் அனனியா அவரிடம் வந்து "சகோதரர் சவுலே இறைவன் என்னை அனுப்பினார். வழியில் உன்னைச் சந்தித்தவர் இயேசு, உனது பார்வையை மீண்டும் பெறச் செய்யவும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவும் என்னை அனுப்பினார்" என்றார்.

உடனே சவுல் பார்வை பெற்றார். திருமுழுக்குப் பெற்று பவுல் என அழைக்கப்பட்டார். அஞ்ஞானிகளின் உலகிற்கு இயேசுவின் திருவாக்கைப்பற்றிப் போதித்தார். கிறிஸ்தவர்களுக்காக 14 திருமுகங்களை எழுதியுள்ளார். பல பயணங்களை மேற்கொண்டார். இறுதியில் இவர் உரோமைக்குக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டார். இவரது திருநாள் தைமாதம் 25ம் திகதியாகும்.

இறைமகன் இயேசுவுக்காகத் தன்னையே முற்றிலும் மாற்றிக் கொண்ட இவர் உண்மையில் விழாவெடுத்துச் சிறப்பிக்கப்படுவது சாலவும் பொருந்தும்.

– மற்றில்டா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இனம், மதம், குலம், நிறம், மொழி, பிரதேசம், வர்க்கம் என்ற காரணிகளால் மனித சமூகம் பிளக்கப்பட்டுள்ளமை.
- வகுப்புவாத வக்கிர சிந்தனைகளை வகுப்பு வாதிகள் அரசியல் முதலீடாகப் பயன் படுத்தி வருதல்.
- ஜனநாயகம், பல சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை வகுப்புவாதிகளின் விருப்பமாக அமைதல்.
- சிறுபான்மை சமூகத்தின் கோரிக்கைகளை பேரின வகுப்புவாத அரசுகள் நிராகரிப்பதோடு, உரிமைப் போராட்டங்களைப் பயங்கரவாதப் போராட்டமாகச் சித்தரித்தல்.
- மேலைத்தேய ஜனநாயக நாடுகள் சுய தேவைக ளுக்காகப் பேரினவாத அரசுகளை ஆதரித்து வருதல்.




- வளர்முக நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினை களில் வல்லாதிக்க நாடுகள் குளிர்காய்ந்து வருதல்.
- சர்வதேச அளவில், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் ஜனநாயக வழியில் போராடுவதற்காக சர்வதேச சிறுபான்மை அமைப்பு ஒன்றினை நிறுவ வேண்டிய அவசியத்தேவை ஏற்பட்டுள்ளமை.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்", "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றெல்லாம் உயர்ரகமான அதியக வார்த்தைகள் உரைக்கப் படுகின்றன. அவை அறிவு பூர்வமான, அர்த்த முள்ள வார்த்தைகளாக அமைந் தாலும், மனப்பாங்கு ரீதியாகவோ, செயற்றிறன்கள் ரீதியாகவோ காட்டப்படுதல் குறைவாகவே உள்ளன. இதனால் உலக நாடுகளிலே இனம், மதம், குலம், நிறம், மொழி, பிரதேசம், வர்க்கம் என்ற பிரிவினைச் சுவர்களால் மனித சமூகம் பிளக்கப்பட்டுள்ளது. வகுப்புவாத வக்கிரக் கோடரிகளால் தேசியஐக்கியம், ஒருமைப்பாடு என்பன சுயலாபத்திற்காகப் பிளக்கப்பட்டுள்ளன. இதனால், தேசிய ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன ஏட்டளவில், பேச்சளவில் தமது இருப்பைக் காட்டுவதுடன் நின்று விடுகின்றன.

பல்லின மக்கள் வாழுகின்ற வளர்முக நாடுகளில் வகுப்புவாத ரீதியாகப் பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. ஆம், பிரச்சினைகள் உரு வாவதில்லை, உருவாக்கப்படுகின்றன. இலங்கை, இந்தியா, ஈராக், ருவாண்டா, துருக்கி, புறுண்டி போன்ற நாடுகளில் வகுப்புவாத ரீதியாகப் பல பிரச்சினைகள், பரிவினைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்த அரசியல் தலைவர்கள், அச் சமூகத் தலைவர்கள் பிழைப்புவாத - உழைப்புவாத - இருப்புவாதக் காரணங்களுக்காகவும், வரட்டுக் கௌரவ வாழ்க் கைக்காகவும் தேசிய ஒற்றுமை, ஒருமைப் பாட்டி னைத் திட்டமிட்டுப் பிளந்து விடுகின்றனர். பெரும் பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அரசியலில் சுயலாபத்திற்காகவும், ஆட்சிப்பீட மகுடத்தினை சூடுவதற்காகவும் வகுப்புவாத வக்கிர சிந்தனை களை அரசியலில் முதலீடாக்குகின்றனர். இனப் பெருமை, மதப்பெருமை, குலப்பெருமை என்ப வற்றை சிலாகித்துப் பேசி, தமது சமூக மக்களைத் தமது சுயலாபப் பொறிக்குள் வீழ்த்துகின்றனர். தமது நாட்டில் வாழுகின்ற சிறுபான்மைச் சமூக மக்களைச் சீண்டுகின்றனர். தமது அரசியல் நாடகத்தில் தம்மைக் கதாநாயகர்களாகவும் சிறுபான்மை மக்களை வில்லர்களாகவும், எதிரிகளாகவும் சித்தரிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புவாதப் பேச்சுகளை வாய் கிழியாத குறையாகப் பேசுகின்றனர். ஒரே நாட்டு மக்கள் மத்தியில் பிளவுகள், பிரிவினைகள், முரண்பாடுகளை விதைக்கின்றனர். பெரும்பான்மைச் சமூகத்தின் தலைவர்களாகவும், காவலர்களாகவும் தம்மைத் தாமே உருவகப்படுத்துகின்றனர். தேர்தல்களில் குதிக்கின்றனர். வாக்குறுதிகளை வகை, தொகையில்லாமல் இறைக்கின்றனர். மக்களை ஏமாற்றி வெற்றி பெறுகின்றனர். ஆட்சி பீடத்தினை அலங்கரிக்கின்றனர்.

பெரும்பான்மைச் சமூக வகுப்பு வாதிகள் அரசாங்கத்தினை அமைத்ததன் பின்னர், நாட்டுக் குரிய பொதுமையான தலைவர்களாக இருப்ப தில்லை. பெரும்பான்மைச் சமூகத்தலைவர்களாக அல்லது குறித்த அரசியல் கட்சித் தலைவர்களாகவே தம்மை வெளிக்காட்டிக்கொள்கின்றனர். வகுப்பு வாதச் சட்டங்கள் - திட்டங்களைத் தீட்டுகின்றனர், நடைமுறைப்படுத்துகின்றனர்.

வகுப்புவாத அரசியலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இலங்கை அமைந்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் S. W. R. D. பண்டாரநாயக்க 1956ம் ஆண்டுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் பேரினவா தத்தினை விஷமாகக் கக்கினார். அப்பாவிச் சிங்கள மக்களை பேரினவாத விஷமேற்றி பேரின வாதிகளாக்கினார். அவர்களின் வாக்குகளைத் தேர்தலில் அறுவடை செய்தார்; வெற்றி பெற்றார்; அரசாங்கத்தினை அமைத்தார். பண்டாரநாயக்க, சிங்கள மக்களுக்கு இனிப்பூட்டு வதற்காகவும், தமிழ் பேசும் மக்களைக் கசப்பூட்டு வதற்காகவும் தனிச் சிங்களச் சட்டத்தினை 1956ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார். தமிழ் பேசும் மக்களை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளிவிட்டார். அதே வழியில் வந்த ஸ்ரீமாவோ அம்மையார் அரசாங்கத்தினை அமைத்த காலத்தில் பௌத்த மதத்தினை அரச மதமாக 1972 ம் ஆண்டு அரசியல் யாப்பு மூலமாகப் பிரகடனப்படுத்தினார். அதே வழியில்தான் J. R. ஜயவர்த்தனா, R. பிறேமதாச, D. B. விஜேதுங்க போன்ற சிங்களத் தலைவர்களும் நடந்துகொண்டனர்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் சிங்களத் தலைவர்கள் தமிழ்மக்களை ஓரங்கட்டினர். தமிழ்மக்கள் ஜனநாயகத்தில் வைத்திருந்த நம்பிக்கையை இழக்க வைத்தனர். 74 சதவீதமான சிங்கள மக்களின் தலைவர்களாகவே சிங்களத் தலைமைகள் செயற்பட்டன. சிறுபான்மை மக்களை ஆயுதம் ஏந்தக்கூடிய நிலைக்கு சிங்களத்தலைமைகள் தள்ளிவிட்டன.

சிறுபான்மைச் சமூக மக்களுக்கு சமத்துவ உரிமை யினைக் கொடுக்க மறுக்கும் பெரும்பான்மைச் சமூகவாதிகள் அவர்களது நியாயமான கோரிக்கை களை நிராகரித்தும் விடுகின்றனர். மேலும், அரசியல் இலாபம் கருதி ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் செய்ததன் பின்னர் ஏமாற்றி வருகின்றனர். இவை யெல்லாம் நிதர்சன உண்மைகளாக நீடித்தவண்ண முள்ளன. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி - செல்வா ஒப்பந்தம் (1965) போன்றவை உதாரணங்களாகவுள்ளன.

ஒடுக்கப்படும் சிறுபான்மை இனமக்களின் நியாயமான கோரிக்கைகள், போராட்டங்களை முறையே நிறைவேற்ற முடியாத கோரிக்கைகள், பயங்கரவாதம் என்றெல்லாம் வகுப்புவாத அரசுகள், சர்வதேச அரசுகளுக்கு எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறான நிலைமைகளை முன்னைய யூகோஸ் லாவியா, இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் காணக்கூடியதாக இருந்தன, இருக்கின்றன. பொருளாதார நலன், அரசியல் இலாபம், இராணுவத் தந்திரோபாயம், புலனாய்வுக்கான ஊடுருவல், பூகோளநலன் போன்ற சுயலாப அணுகுமுறைகளில் செயற்படும் வல்லாதிக்க நாடுகள் ஒடுக்கப்படும் சிறுபான்மைச் சமூகத்தைவிட தமது தேவைகளுக்கு வாலாட்டக்கூடிய நாடுகளைத் தமது நட்பு நாடுகளாக்கிக் கொள்கின்றன. வகுப்புவாத அரசு களின் பலவீனங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமது சுயலாபங்களை ஜனநாயகப் போர்வை போர்த்த முதலாளித்துவ நாடுகள் நிறைவேற்றிக்கொள்கின்றன.

குறிப்பாக அமெரிக்கா தலைமையில் இயங்கும் நேட்டோ (NATO) அமைப்பு நாடுகள் சுயலாபங்களிலேயே அக்கறை காட்டுகின்றன. சில சந்தர்ப்பங்களில் "பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல்" என்ற இரட்டை வேடத்தினையும் போடுகின்றன. யுத்த தளபாடங்கள் போன்ற இலாபம் தரக்கூடிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் முதலாளித்துவ நாடுகள் அவற்றை விற்பனை செய்வதற்காகச் சந்தை வாய்ப்புகளைத் தேடுகின்றன. அவ்வாறான நிலையில் உள்நாட்டுப் போர்களை மறைமுகமாக ஊக்குவிப்பதன் மூலமாக ஆயுத தளபாடங்களை விற்பனை செய்து வருகின்றன. **உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவுமாயின் முதலாளித்துவ நாடுகளின் இலா பம் தரக்கூடிய ஆயுத உற்பத்திக்கான சந்தை வாய்ப்புகள் மூடப்பட்டுவிடும்.**

இதனால் ஜனநாயக உரிமைகளை விட, முதலாளித்துவ பொருளாதார இலாபமே முதன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது என்ற ரீதியில் மேலைத்தேய, கீழைத்தேய முதலாளித்துவ நாடுகள் செயற்படுகின்றன. சுருக்கக் கூறினால் உள்நாட்டுப் போர்கள், பிரிவினைகள், பிளவுகள் முதலாளித்துவ நாடுகளின் சுயலாப ஊடுரு வல்களுக்குச் சாதகமான சமிக்ஞைகளாக அமை கின்றன. அதற்கு இலங்கையும் விதிவிலக்காக வில்லை. சுரண்டுவது உட்பட சுய இலாபங்களில் அக்கறை காட்டி வரும் முதலாளித்துவ வல்லாதிக்க நாடுகள் ஒடுக்கப்படும் சிறுபான்மைச் சமுகத்தின் குரல்களை, போராட்டங்களை வகுப்புவாத அரசு களுடன் இணைந்து நசுக்கிவிடவே முனைகின்றன.

வகுப்புவாத அரசுகளின் இராணுவத்தினர் – ஆயுததாரிகள் சிறுபான்மைச் சமூகத்தின் மீது மேற் கொள்ளுகின்ற இனச் சுத்திகரிப்பு நடவடி க்கைகள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை சுயலாபங்கருதி அமெரிக்காவின் தலைமையில் செயற்படும் முதலாளித்துவ நாடுகள் கண்டு கொள்வதில்லை. மாறாக சிறுபான்மைச் சமூகத்தின் சார்பான போராட்டங்களின் போது இடம்பெறக்கூடிய சிறு வன்முறைகளைக்கூட வகுப்புவாத அரசுக ளுடன் இணைந்து சர்வதேச ரீதியாகத் தம்பட்டம் அடிக்கின்றன. பல்வேறு தடைகளைப் போடு கின்றன. "மாமியார் உடைத் தால் அது மண்குடம், மருமகள் உடைத்தால் அது பொன்குடம்" என்ற வியாக்கியான அடிப்படையில் முதலாளித்துவ நாடுகள் பல நடந்து கொள்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை அமைப்புகள் கூட ஒடுக்கப்படும் சிறுபான்மை இன மக்களின் உரிமைப் போராட்டங்கள் மீது காட்டும் கரிசனைகள் குறைந்த அளவிலேயே உள்ளன. முதலாளித்துவ நாடுகளின் அச்சாணியில் நகர்ந்துகொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுபான்மை இன மக்கள் சார்பாகப் பாரிய பங்களிப்புகளைச் செய்ய முடியாமல் உள்ளது. சர்வதேச பொலிஸ்காரனான அமெரிக்கா, ஐ. நா. சபைத் தீர்மானத்தினைப் பொருட்படுத்தாமல் ஈராக் கினை ஆக்கிரமித்ததினை ஐ. நா. சபையால் தடுக்க முடியவில்லை.

அமெரிக்காவின் பின் அரவணைப்பில் இருந்துகொண்டு பலஸ்தீனம் உட்பட மத்தியகிழக்கு நாடுகள் மத்தியில் சண்டியனாக விளங்கும் இஸ்ரேலினை ஐ. நா. சபையால் போதியளவு கட்டுப்படுத்த முடியவில்லை. 15 நாடுகள் கொண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலுள்ள அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளிலுள்ள வெட்டுவாக்கு அதிகாரம் (VETO POWER) இஸ்ரேல் போன்ற நாடுகளின் அடாவடித்தனங்களைப் பாதுகாக்க உதவுகின்றன ஆயின், "வல்லவன் வாழ்ந்தான், வலுவிழந்தவன் வீழ்ந்தான்" என்ற முதலாளித்துவ நியதியே உலகை ஆட்டிப் படைத்து வருகின்றது. இந்த நிலையில், வகுப்புவாத அரசுகள் சிறுபான்மை இன மக்களை ஒரு கையால் ஒடுக்கிக்கொண்டு முதலாளித்துவ வல்லாதிக்க நாடுகளின் தோள்களில் மறுகையைப் போட்டுக் கொள்கின்றன. இதனால் வகுப்புவாத அரசுகளின் நண்பர்களான வல்லாதிக்க நாடுகள் சிறுபான்மை மக்கள் மீது காட்டும் கரிசனை மிகக்குறைவாக வேயுள்ளது. "எஜமான் (முதலாளி) அடித்தால் அடிமை (தொழிலாளி) பட்டுத்தான் ஆகவேண்டும்" என்ற போக்கில் முதலாளித்துவ நாடுகள் நடந்துகொள்கின்றன. இவ்வாறான சர்வதேசச் சூழ்நிலையில், உரிமைக்காக ஏங்கித் தவிக்கும் சிறுபான்மை இன மக்களின் நிலை பயங்கரமாகவும், பரிதாபமாகவும் உள்ளது.

*தொடரும்...*

**– சகாயன் –**

## உண்மைப் பணியில் ஊடகங்கள்

2008 ம் ஆண்டிற்கான உலகத் தொடர்பாடல் தினம், "உண்மைப் பணியில் ஊடகங்கள்" எனும் தலைப்பில் கொண்டாடப் படவுள்ளதாக திருத்தந்தை 16 ம் பெனடிக்ற் அண்மையில் தெரிவித்தார். உண்மைகளைத் தேடி அதனை மற்றவர்களுடன் பகிரும் பணியை ஊடகங்கள் என்றும் செய்யவேண்டும். இன்றைய ஊடகங்கள் இந்த மையக் கருத்தை நன்கு புரிந்துகொண்டு, அதன்படி தமது பணிகளை மக்கள் மத்தியில் ஆற்றவேண்டும். ஆபத்துகள் அதிகரித்துவரும் இக்கால கட்டத்தில் உண்மையைத் தேடுவது மிகவும் சவால் நிறைந்தது. அத்துடன், அதனைத் தமக்குள் வைத்திருப்பது உண்மையான பணி என்றும் கூற முடியாது. உண்மையைத் தேடி அதைப் பகிர்வது ஊடகங்களின் முக்கிய பணியாகும் என்று குறிப்பிட்டார் திருத்தந்தை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புனித பவுலின் நிருபங்களும், அமைப்பு முறையும், கிறிஸ்தவ மதிப்பீடுகளும்.

நிருபங்கள் என்பது கடிதங்கள், திரு மடல்கள், சுற்றுமடல்கள் எனப் பல பொருட்படும். இவற்றிலே பவுலுக்கே உரித்தான நிருபங்கள் பதினான்காகும். இருப்பினும், இறுதித் திருமடலாகிய எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலை அவர் எழுதியதற்கான ஆதாரங்கள் இல்லை. எனினும் பவுலின் ஏனைய மடல்களிலே கூறப் பட்டுள்ள ஆழமான இறையியல் கருத்து ஒற்றுமை இருப்பதனால் இதனையும் இவரது மடலாகவே கருதுகின்றனர். பவுலுடன் தொடர்புபட்ட இறுதியான திருமடலாய் இது கருதப்படினும் திருமுக அமைப்பு முறை இதில் இல்லை. மாறாக ஓர் இறையியல் கட்டுரையாகவே இது அமைந்துள்ளது.

திருத்தூதர்கள், திருச்சபையின் தலைவர்கள் அக்காலத் தேவைகளின் அடிப்படையில் எழும் கேள்விகளுக்கு விடையளிக்கவும், மாற்றுக் கருத்துகளுக்கு விடையளிக்கவும், மாற்றுக் கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவிக்கவும், மக்களை இறை நம்பிக்கையில் மேலும் வலுப்பெறச் செய்யவுமே திருமுகங்களை எழுதியுள்ளனர். இதற்கமைவாகவே பவுலும் தமது திருமுகங்களை எழுதியுள்ளதாய்க் கருதப்படுகிறது.

திருத்தூதுப் பணியிலே பவுல் தாம் சென்ற மூன்று பயணங்களிலும் பல சபைகளை நிறுவியுள்ளார்; பலரைக் கிறிஸ்துவின் பால் திருப்பி திருமுழுக்குக் கொடுத்து திருச்சபையில் இணைத்துள்ளார். இவ்வாறு தாம் திருச்சபையில் இணைத்தவர்களையும், தம்மால் நிறுவப்பட்ட திருச்சபைகளையும் மீண்டும் போய்ப் பார்த்துள்ளார். கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளவைத்து, திடப்படுத்தி தம் மேய்ப்புப் பணியினைத் தொடர்ந்தாற்றியுள்ளார். மேலும் தாம் செல்லமுடியாத இடங்களுக்குத் தன் உடன்பணியாளர்களை அனுப்பியுள்ளார். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களின் தேவைகள் சந்தேகங்களுக்குப் பதில் கூறியும், முரண்பாடுகளைச் சீர் செய்தும் இம்மடல்களை எழுதினார். இவையே பவுலின் திருமுகங்களாய்க் கருதப்படுகின்றன.

மேலும் பவுலின் திருமுகங்களை நோக்குகையில் அவற்றை காலத்தின் அடிப்படையில் அல்லமாறாக அவற்றின் அளவைக் கொண்டே வரிசைப் படுத்தியுள்ளனர். இவற்றின் அமைப்பு முறையானது

- முன்னுரையும் வாழ்த்தும்
- நன்றி கூறுதல்
- உள்ளடக்கம்
- முடிவுரையும் இறுதி வாழ்த்தும்

போன்ற வரிசையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை பவுலே தம் கைப்பட எழுதியுள்ளதாகவும் சிலவற்றைத் தம் சிந்தனையில் வளர்க்கப்பட்ட சீடர்களைக் கொண்டு எழுதியுள்ளதாகவும் கூறப்படுகிறது. மற்றும் பவுல் தாம் சென்றிராத உரோமைத் திருச்சபைக்கும் மடல் எழுதி, உலகத் திருச்சபை ஏற்றுக் கொள்ளவேண்டிய ஆழமான, பொதுவான இறையியல் கருத்துகளையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் பவுலின் ஒவ்வொரு திருமுகங்களிலும் ஒவ்வொரு வகையான ஆழமான இறையியல், கிறிஸ்தவ மதிப்பீடுகளையும் கருத்துகளையும் காணக்கூடியதாகவுள்ளது. அவையாவன: இறையருள் என்பது சட்டங்களைவிட மேலானது, விசுவாசமே மீட்பு, கிறிஸ்துவின் மேன்மை, தாழ்ச்சி, பரிசுத்த ஆவியின் ஆற்றல்கள், வரங்கள், பங்கு, சமூகம், குடும்ப ஒற்றுமை, இறுதி இராவுணவு, நற்கருணையின் மகத்துவம், சகோதர மனப்பான்மை, கிறிஸ்தவ நம்பிக்கை, கணவன் மனைவி உறவு, அன்பு, ஒற்றுமை, நம்பிக்கை இல்லையேல் இறை நம்பிக்கை வீண். இவை போன்ற பல்வேறுபட்ட ஆழமான கருத்துகளை எழுதி மக்களைக் கிறிஸ்துவின் பால் ஈர்த்து, முரண்பாடுகளைத் தவிர்த்து, ஆவிக்குரிய வாழ்வில் வாழவும், மகிழ்வுடனும் மன உறுதியுடனும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்கமைய வாழ தமது மடலில் பணித்துள்ளார். எனவே நிருபங்களிலே பவுலின் நிருபங்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக மட்டக்களப்பு 'ரெலிகொம்' பிராந்தியநிலையத்தில் சிரேஷ்ட தொழில் நுட்ப அதிகாரி (விசேட தரம்) யாகப் பணியாற்றும் திரு. தம்பியையா அன்னலிங்கம் அவர்களைச் சந்தித்தோம். திரு. த. அன்னலிங்கம் அவர்கள் தன் பணியில் சிறப்பான முறையில் ஈடுபடுபவர் என்பதை விடுத்து, மிகவும் மனிதாபிமான முறையில் வாடிக்கையாளருடனும், தனக்குக் கீழ் பணி புரிபவர்களுடனும் செயற்படுபவர் என்ற விபரம் 'தொண்டனை' மிகவும் கவர்ந்தது. சக ஊழியர்களுடன் அவர் பழகும் முறைகள், தனது நிறுவனத்தின் உயர்ச்சியில் அவர் காட்டும் ஈடுபாடு, உறவுமுறைகள் என்பன 'தொண்டனின் சில நிமிடங்களில்' பங்குகொள்ள ஒரு பொருத்தமான அன்பர் கிடைத்துவிட்டார் என்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தியது. எனவே அவருடன் தொடர்பு கொண்ட போது மிகவும் தயக்கத்துடன் சம்மதம் தெரிவித்தார். அவரின் தயக்கத்திற்குக் காரணம் அவரின் பணிவும், தன்னடக்கமும் தான். அவரின் அலுவலகத்தில் எல்லாப்பணிகளும் முடிந்து சற்று ஓய்வாக இருந்த வேளையில் ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை ஆறு மணியளவில் அவரைச் சந்தித்தோம்.

**❃ வணக்கம்! திரு. த. அன்னலிங்கம் அவர்களே! முதலில் உங்களைப்பற்றியும், உங்கள் பணிகள் பற்றியும் சற்றுச் சொல்லுங்களேன்.**

வணக்கம்! எனது பெயர் தம்பியையா அன்னலிங்கம். நான் தற்போது ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரி யாக விசேட தரத்தில் கடமை புரிகின்றேன். இப்பதவி ஆரம்பகாலத்தில் DIT என அழைக்கப்பட்டது. நான் க.பொ.த (உ.த) கணிதப்பிரிவில் கல்விபயின்றவன் 1981 ஏப்ரல் மாதத்தில் உதவித் தொலைத் தொடர்பு பரிசோதகராக நியமனம் பெற்றேன். பின்னர் மொறட்டுவை தொலைத்தொடர்புகள் பயிற்சி நிலையத்தில் ஒரு வருடம் விசேட பயிற்சிகள் பெற்றபின் 1982ல் தொலைத்தொடர்புப் பரிசோதகர் தரம் 3ல் நியமனம் பெற்றேன். பின்னர் படிப்படியாக தரம் 2B, தரம் 2A, வகுப்பு 1, அதியுயர் தரம் என்னும் பதவி நிலைகளை அடைந்தேன். ரெலிகொம்மில் எல்லாப் பதவியுயர்வுகளும் பரீட்சை மூலமும் தொடர்ந்து நேர்முகப் பரீட்சை மூலமும் மட்டும்தான் வழங்கப்படுகின்றன.

**❃ தற்போது, உங்கள் நிறுவனத்தில் உங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகளென்ன?**

நான் பணிபுரியும் பகுதி, தொழில்நுட்பப் பகுதியாகும். தொழில்நுட்பப் பகுதியில் நான்கு பெரும் பிரிவுகள் உள்ளன.

1. ஆளிப்பகுதி (SWITCH)
2. கடத்தும் பகுதி (TRANSMISSION)
3. வெளியக உபகரணப் பகுதி (OUT SIDE PLANT)
4. தரவுகள் தொடர்புப் பகுதி (DATA COMMUNICATION)

1982-1984 பகுதியில் நான் ஆளிகள் தொடர்பான பகுதிகளில் பணியாற்றினேன். அதன் பின்னர் வெளியக உபகரணப்பகுதியில் கடமையாற்றி வருகின்றேன். ஒருவருடைய தொலைபேசியில் இருந்து வரும் அழைப்புகள், கம்பிகள் மூலம் ஆளிப்பகுதியை வந்தடையும். வீட்டில் இருந்து ஆளிப்பகுதி வரையுள்ள பகுதிதான் வெளியக உபகரணப் பிரிவு என்று அழைக்கப்படும். இப்பகுதியில் ஏராளமான உபகரணங்கள் காணப்படும். ஆளிப்பகுதியை வந்தடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்புகள் கடத்தும் பகுதியூடாக தூரப்பிர தேசத்தில் உள்ள கடத்தும் பகுதியை அடையும். பின்னர் அச்செய்தி சென்றடையும் பிற தேசத்திலுள்ள ஆளிப்பகுதியூடாக வெளியக உபகரணப் பிரிவை அடைந்து அழைக்கப்பட்டவரின் தொலைபேசியைச் சென்றடையும்.

**❋ புதிய புதிய தொழில்நுட்ப முறைகள் அறிமுகப் படுத்தப்படும் போது நீங்கள் அவற்றை எவ்வாறு அறிந்து கொள்வீர்கள்?**

❖ அடிக்கடிச் சேவைக்காலப் பயிற்சிகள் இடம்பெறும். அவை தொடர்ச்சியாக ஒரு மாதம் வரை இடம்பெறுவதும் உண்டு. 1998 தென் கொரியாவில் ஒரு மாதப் பயிற்சியொன்றைப் பெறும் வாய்ப்பும் கிடைத்தது. இது வெளியக உபகரணப் பகுதி சம்மந்தமானது.

**❋ தொலைத் தொடர்பு வலையமைப்பில் ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு கண்டுபிடிப்பீர்கள்?**

❖ எங்களிடம் AVO மீற்றர் என்ற பழுது கண்டுபிடிக்கும் கருவியுண்டு. இதனைப் பயன்படுத்தி எங்கே கோளாறுகள் உண்டு என்பதைக் கண்டுபிடித்துவிடுவோம். வேறுமுறைகளைப் பாவித்தும் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வோம். எமது நிறுவனப் பணியாளர்கள் இது தொடர்பாக மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்று கின்றார்கள்.

**❋ பழுதுகள் தொடர்பான 1241 என்ற இலக்கத்திற்கு அறிவிக்கும் போது அச்செய்தி உங்களை எப்படி வந்தடைகின்றது?**

❖ அச்செய்திகள் கொழும்பைச் சென்றடைந்து பின்னர் கணனி வலையமைப்பின் மூலம் எம்மை வந்தடைகின்றன. அதன்படி உடனடியாகத் திருத்த வேலைகளை ஆரம்பிப்போம்.

**❋ நீண்டகாலமாகத் திருத்த வேலைகள் செய்யப்படாத பட்சத்தில் ஏதேனும் நடை முறைகள் உண்டா?**

❖ இயலுமானவரை விரைவில் திருத்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டுவிடும். ஏழு நாட்களுக்கு மேல் தாமதமானால் விதிகட்கும், நிபந்தனைகட்கும் உட்பட்ட வகையில் சில கொடுப்பனவுகளை ரெலிகொம் செய்யும். பெரும்பாலும் வாடகையில், மாதாந்த கட்டணப் பட்டியலில் சலுகைகள் வழங்கப்படும். இதே வேளையில் வாடிக்கையா ளர்களும் தங்கள் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்திக்கொள்ள வேண்டும். அதற்கேற்றாற்போல் 'ரெலிகொம்' சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

**❋ தனியார் தொலைத்தொடர்பு நிலையங்கள் நடத்துபவர்கள் தங்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமா?**

❖ இல்லை, அவர்கள் அதற்குரிய வாடகையைச் செலுத்துதல் வேண்டும். சிலர் வீட்டிற்கான இணைப்புகளைப் பெற்றுக்கொண்டு அதனைக் கொண்டு கடைகளிற்கோ, தொலைத் தொடர்பு நிலையங்களிற்கோ பயன்படுத்துகின்றார்கள். இது தவறு. அதனைக் கண்டுபடிக்கும் வசதிகள் எம்மிடம் உண்டு. ஆனால் ஏஜென்சி தபால் அலுவலகங்கள் தொலைத்தொடர்புகள் ஆணைக் குழுவிடம் அனுமதி பெறவேண்டும்.

**❋ ஸ்ரீலங்கா ரெலிகொம் யாருக்கு சொந்தமான நிறுவனம்?**

❖ இந்நிறுவனத்தில் 49.5 விழுக்காடு பங்குகள் அரசாங்கத்திற்கும், சிறுபகுதி ஊழியர்கட்கும் ஏனைய பங்குகள் NTT (JAPAN) நிறுவனத்திற்கும் உரியன. இது ஒரு PLC நிறுவனம். அதாவது Public Limited Company.

**❋ CDMA என்று சொல்லப்படுகின்ற சுருக்கப் பதத்தின் அர்த்தம் என்ன?**

❖ CODE DIVISION MULTIPLE ACCESS.

**❋ நீங்கள், உங்கள் வாழ்க்கையில் சந்தித்த மறக்கமுடியாத சம்பவம் பற்றிக் கூறமுடியுமா..?**

❖ எனது முதல் நியமனம் யாழ்ப்பாணம், பின்னர் மன்னாரில். தொடர்ந்து பதினைந்து வருடங்கள் கொழும்பில் பணியாற்றினேன். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மட்டக்களப்பிற்கு இடமாற்றம் பெற்று வந்தேன். கொழும்பில் பணியாற்றியபோது எனக்குச் சிங்களம் தெரியாது, எனக்குக் கீழ் பணியாற்றியவர்கள்தான் சிங்களம் பழக்கினார்கள். எனக்குச் சற்றுக் கோபம் வருவதுண்டு. ஒரு நாள், கொழும்பில் பணியாற்றிய போது எனக்குக் கீழ் உள்ள ஊழியர்களை சற்றுக் கோபமாகவே திட்டிவிட்டேன். அதில் ஒரு ஊழியர் மறுநாள் என்னைச் சந்திக்க வந்தார். தான் சில விடயங்கள் சொல்ல வேண்டும் என்றும் கோபிக்க வேண்டாம் என்றும் சொன்னார். சொல்லச் சொன்னேன். “சேர், உங்களுக்குக் கோபம் வரக்கூடாது. நீங்கள் எங்களின் பெரியவர். கோபம் உங்களுக்குச் சங்கடத்தைத்தான் கொண்டுவரும்” என்று கூறினார். அன்றிலிருந்து என்னைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொண்டுவிட்டேன். இது எனக்கு மறக்க இயலாத சம்பவம். அத்துடன் தென்கொரியா சென்றதும் மறக்க இயலாததுதான்.

***ஈற்றில் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம். திரு. த. அன்னலிங்கம் அவர்கள் சிறந்தவொரு பாடகர், வில்லுப்பாட்டு வித்தகர். குறிப்பாக ஊழியர்கள், வாடிக்கையாளருடன் அன்புடனும் பண்புடனும் பழக வேண்டும் என்று விரும்புபவர். இதற்காக ஊழியர்களுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மேற்கொண்டுவருகின்றார். இது பலரின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. ‘தொண்டனும்’ அவரைப் பாராட்டுகின்றது.***

- ஆழியோன் -

# கடுகுக் கதை 1 காணிக்கை

(சிறுகதை)



- பற்றி

ஞாயிற்றுக்கிழமை காலைப்பூசைக்குப் போவதற்காக மனைவி திரேசாவும், மூன்று வயதான மகன் ஜேக்கப்பும் வீட்டில் இருந்து வெளியில் வந்தார்கள். பூசை முடிய திரைப்பட மொன்றின் காலைக்காட்சி பார்ப்பதாக அவர்களின் திட்டம்.

கேற்றிற்கு வரும்போது எதிர்வீட்டு சகாயம், ஜோசப்பிடம் வந்து “தம்பி குறை நினைக்காமல் ஆயிரம் ரூபாவொன்று தாருங்கள், மழையில கூரை ஒழுகுது. எப்பிடியும் இரண்டு மாதத்தில் தந்திடுவன்” என்று கண் கலங்கியபடி கேட்டான். “அண்ணே, என்னட்ட இப்ப காசில்ல. வேறெங்கயும் கேட்டுப்பாருங்க” என்றான் ஜோசப்.

கோயிலில் திருப்பலி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜேக்கப் தாயின் கைப்பையை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான். காணிக்கை நேரம் வந்தது. ஜேக்கப் தாயின் கைப்பையைத் திறந்து படத்திற்குப் போக வைத்திருந்த ஐநூறு ரூபாய்த்தாளை காணிக் கைத்தட்டில் போட்டுவிட்டான். இதனைத் திரேசாவும், ஜோசப்பும் கவனிக்கவேயில்லை. பூசை முடிவில் அறிவித்தலில் குருவானவர் இவ்வாறு சொன்னார். “இன்றைய காணிக்கைப் பணம் எமது பங்கைச் சேர்ந்த சகாயம் அவர்களின் வீட்டிற்கு ஓலை வேயப் பயன்படும்”.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும், இன்றைய தமிழர் சமூகமும்

## 8. மலைப்பொழிவும் அன்பு நெறியும்



இயேசு ஒரு புதிய சமுதாயத்தையே உருவாக்க வந்தார். அச்சமுதாயத்தை தனிமனித மதிப்பின் மேலும், அன்பின் மேலும் கட்டினார். அவர் அறிவித்த ஒழுக்க நெறிக்குக் கூட (மத். 5: 21-48) இறை அன்பு, பிறர் அன்பு என்பதைத் தலையாயச் சட்டமாக அறிவித்தார். நீதியை அடிப்படையாகக் கொண்டதாலும், சமுதாயத்தில் உயர்வு-தாழ்வு, அதிகாரம்-அடிமைத்தனம் போன்ற அநீதிகளை நீக்கவேண்டி விரும்பியதாலும் அவரது போதனை புரட்சியை ஏற்படுத்தியது. "இயேசு உரையாற்றி முடித்தபோது அவரது போதனையைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர்." (மத். 7:28) இதன்படி பழைய ஏற்பாட்டுப் பத்துக்கட்டளை களைப் போல இயேசுவின் போதனைகளையும் 10 பொழிவுகளாக வரையறுக்கலாம்.

- அஞ்சாதீர்கள், அனைத்திற்கும் மேலாகக் கடவுளது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடைய வற்றையும் தேடுங்கள். (மத். 6:33)
- ஆணையிட வேண்டாம், நீங்கள் பேசுவது 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ இருக்கட்டும். (5:36-37)
- நீங்கள் செபிப்பது, நோன்பு இருப்பது, தர்மம் செய்வது இவை மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியட்டும். (6:2-17)
- நீங்கள் உலகின் உப்பாகவும், ஒளியாகவும் இருக்கிறீர்கள். (5:13,14)
- சினம், இகழ்ச்சி, பழிச்சொல் இவை கொலைக்குச் சமனானவை.
- ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தில் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று. (5:28)
- மண்ணுலகில் உங்களுக்கென செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம், மாறாக விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள். (6:19,20)
- உங்கள் சகோதரரோடு நல்லுறவு ஏற்படுத்திய பின் கடவுளுக்குக் காணிக்கை செலுத்துங்கள். (5:23)
- பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (7:12)
- உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள். உங்களைத்துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள். அப்போது உங்கள் விண்ணகத் தந்தையின் மக்களாய் இருப்பீர்கள். (5:44,45)

இவ்வாறு பழைய சட்டங்களின் உட்பொருளை மக்களுக்குத் தன் போதனை மூலம் தெளிவு படுத்திய யேசுக்கிறிஸ்து தனிப்பட்ட சில புதிய ஒழுக்க, சட்ட விதிமுறைகளையும் முன்வைக்கத் தவறவில்லை.

மனித நேயம் இழந்த மணவிலக்கு முறைகளைக் கண்டித்து, பெண்ணின் மாண்பை உயர்த்தக்கூடிய ஒரு புதிய சட்டத்தை அவர்கள் முன் வைக்கிறார். "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்."

### அழிவிலிருந்து தப்பிய அதிசயம்

1937ம் பயங்கரமான பேரழிவிலிருந்து பூமி மயிரிழையில் தப்பியது. 5 லட்சம் தொன் எடையுள்ள ஹேர்மீஸ் என்ற குட்டிக் கிரகம் ஒளியின் வேகத்தில் பூமியை நோக்கி வந்துகொண்டிருந்தது. 8 லட்சம் கிலோமீட்டர் தூரத்தில் பாதை மாறிப் போய்விட்டது. அவ்வாறு நேராமல் இருந்திருந்தால் 3 வினாடிகளில் பூமியில் விழுந்து அழிந்து போயிருக்கக் கூடும். அவ்வளவு வேகத்துடன் 5 லட்சம் தொன் எடை விழுந்தால் ஏற்படக் கூடிய அழிவை நம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. பூமி தூள்தூளாகச் சிதறுண்டு போயிருக்கக்கூடும். என்றோ ஒரு நாள் இவ்வாறு நேரத்தான் போகிறது என்ற அச்சம் மனித குலத்துக்கு எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிலுவைக்கு வந்த சோதனைகள்

- றெ. சிதம்பரி -

மறுபடியும் தபசு காலத்தினுள் கடந்து செல்ல பெலனும் சக்தியும் அளிக்க வேண்டு மென்று நன்றியோடு தேவனைத் துதிப்போம். வருடங்கள் கடந்துகொண்டு போகின்றன. முடிவுகாலமும் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. ஆனாலும், நாம் எவ்வித கரிசனையும் அற்றவர் களாகவே இருக்கின்றோம். நம்மில் ஏதேனும் மாற் றங்களுண்டா? கிறீஸ்துவோடு உள்ள உறவில் வளர்கிறோமா? அல்லது, பின்னடைந்துவிட்டோமா?

ஒரு சஞ்சிகையின் முன் அட்டையிலே "எல்லோரும் பரலோகம் செல்ல விரும்பு கின்றார்கள், ஆனால்... யாருமே சாக விரும்ப வில்லை." எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. நாம் பிறந்தபடியினால்தான் சாகிறோம். நமது ஆண்டவரோ, சாவதற்கென்றே பிறந்தவர். இயேசுவின் புகழ் பரவிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர், சாவைப் பற்றியே பேசினார். மனுக்குலத்தின் பாவம் தனது மரணத்தினால் பரிகரிக்கப்படுவது மட்டுமல்ல, மரணத்தின் மீது தமக்குள்ள அதிகாரமும் வெளிப்படும் எனவும் அறிந்திருந்த அவர், கோதுமை மணி செத்து மடிந்து அதிக பலனைக் கொடுக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

இயேசுவின் உயிர்த்தெழுதலில், நாம் ஜீவனைப் பெற்றுக்கொண்டோம். அதற்காக நாமும் இன்று சாக வேண்டும். நம் வாழ்வு பாழாகவேண்டும் என்பது அர்த்தமல்ல, நம்மைச் சுற்றியுள்ளவைகள், நமக்கிருக்கும் ஆணவம், சுயநலம், பேராசை போன்றவைகளும் அழிந்து ஒழிந்து கிறீஸ்துவுக்குள் தளிர் விட்டு எழும்பவேண்டும். நாம் நமக்குள் சாக வேண்டும்.



## இயேசுவின் சிலுவை

சிலுவை சாதாரண கொலைமரம் மட்டுமல்ல, அருவருப்பானது, அவமானத்தின் அடையாளமானது, நிந்தைக்குரியது, மிகக்கொடிய குற்றவாளியின் சின்னமும் அதுவே. தாம் சாகப்போகும் சிலுவையைத் தானே தூக்கிய ஒருவன், தப்பித்துக்கொண்டதாக சரித்திரமே இல்லை. நம்வாழ்வில், இச்சிலுவை வகிக்கும் பங்குதான் என்ன? நீ உன் சிலுவையைச் சுமக்கிறவனாக இருந்தால்மட்டுமே கிறீஸ்தவன் எனக்கூறிக்கொள்ளத் தகுதி பெற்றவன். நம்மை அழித்துப்போடக்கூடிய வல்லமையுள்ள காரியங்களிலிருந்து தப்பிக்கொள்ள ஒரே வழி "கடவுளே நிதமும் என்னைச் சிலுவையில் அறையும்" எனச் செபிப்பதுதான். சிலுவை சுமக்கச் சம்மதமில்லாமல் பரலோகம் போவதெப்படி? " அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு மண்டையோட்டு இடம் என்ற இடத்திற்குப் புறப்பட்டுப் போனார். (யோவான் 19 - 17) கிறீஸ்து தாமே சிலுவையைச் சுமந்து எம் பாவம் தீர்த்து விட்டார். நாம் ஏன் சிலுவையைச் சுமக்க வேண்டும் என்று சிலர் கேட்பதுண்டு. கிறீஸ்து சுமந்த சிலுவையை யாருமே இனிச் சுமக்கமுடியாது. அவரும் இன்னுமொரு தடவை சுமக்கவேண்டிய அவசியமும் இல்லை, தேவையும் இல்லை. அவர் வந்த நோக்கம் நிறைவேறிவிட்டது, அவர் வெற்றியின் வேந்தனாக பரலோகத்திலே பிதாவின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவர் சிலுவையை நாம் சுதந்தரித்துக்கொள்ளும் வரை நமக்கு ஏது வாழ்வு?

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று கேட்டவனுக்கு உன் சிலுவையை எடுத்துக்கொண்டு "என் பின்னே வா" என்றுதானே இயேசு கூறினார். அன்று அவனுக்கு என்ன தடைகள் இருந்தன? இன்று எமக்கு என்ன தடை இருக்கிறது? சிந்திப்போம். இயேசுவின் பக்கத்திலிருந்த கள்வருக்கு சிலுவை மரம் தண்டனைக்குரியதாய் இருந்தது. ஆனால், ஆண்டவருக்கோ தம்மைப் பலி செலுத்தும் ஒரு பலி பீடமாகத் தெரிந்தது. இது கிறிஸ்து தாங்கிய சிலுவை.

## தாசின் சிலுவை

"காட்டிக்கொடுத்தல்" என்பது பற்றி யாவரும் அறிந்ததே. கடைசி இராப்போசனப் பந்தியில் ஆண்டவரால் எச்சரிக்கப்பட்ட யுதாஸ் இப்படிச் செய்யக் காரணம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்த மனுஷனால் மனுஷ குமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" (மாற்கு 14:21) சிலருடைய பெயருக்குப் பின்னால் அவர்கள் படித்து, சாதித்து சம்பாதித்த பட்டங்கள் எழுதியிருக்கும். ஆனால் யூதாஸிற்கோ அவன் பெயருக்கு முன்னால் "காட்டிக்கொடுத்த யூதாஸ்" என்று எழுதுமளவிற்கு அவனைச் சீரழித்தது எது? அவன் தன் சிலுவையைப் புறக்கணித்துவிட்டான் என்பதுதான் உண்மை. கடவுளின் சித்தம் நிறைவேற வேண்டுமானால் இயேசு, யாராவது ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று பேசுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இயேசுவைக் காட்டிக்கொடுக்க முன்னரே சாத்தான் அவனிடம் புகுந்துகொண்டான். வஞ்சகம் நினைத்தான். பிரதான ஆசாரிகளுடன் திட்டம் தீட்டினான். விலை பேசினான். முப்பது வெள்ளிக்கு ஆசைப்பட்டான். ஏனைய பதினொருபேரையும் விடுத்து, சாத்தான் இவனுள் மட்டும் புகுந்தது எப்படி? அவனுக்குள் இருந்த பண ஆசையும், நரிக் குணமுமே இயேசுவோடு கூட இருந்து சுமக்கும் சிலுவையை அவன் கண்களுக்கு மறைத்தது. இல்லாவிடில் இயேசு தன் கையால் ரொட்டியைப் பிட்டுக்கொடுத்து எச்சரித்த பின்னும் எழுந்து போயிருப்பானா? பின்னர் நாண்டுகொண்டு செத்திருப்பானேன்? இது யூதாஸ் தள்ளிவிட்ட சிலுவை.

## பேதுருவின் சிலுவை

"எல்லோரும் உம்மைவிட்டுப் போய்விட்டாலும் ஒருபோதும் நான் ஓடிப் போகமாட்டேன்" (மத்தேயு 26:33) முன்பின் சிந்திக்காமல் எவ்வளவோ உறுதிமொழிகள் கொடுக்கிறோம். நிறைவேற்ற முடியாமல் அல்லல்படுகிறோம். ஏன் இப்படி நடக்கிறது? நமக்கு முன்னே வைக்கப்பட்டிருப்பது என்ன என்பதை உணராமல் நம்மிலும், சுயநம்பிக்கையிலும் சார்ந்து நின்று உறுதியைக் கொடுப்பதே இதற்குக் காரணம். நமது தைரியத்திலும், சுயதன்மையிலும் சார்ந்து நிற்குமளவுக்கு நாம் சுமக்கவேண்டிய சிலுவை நமது கண்களுக்கு மறைக்கப்பட்டுத்தான் இருக்கும். நாம் கடவுளைச் சார்ந்து செயற்படும்போது அதே சிலுவை சுகமாகவே இருக்கும்

பேதுரு உண்மையாகவே ஆண்டவரை நேசித்தார். "வா" என்று அழைத்ததும் உடன் வந்தார். மரணத்தைப் பற்றிச் சொன்னபோது இது உமக்கு நேரிடக்கூடாது என்றார். உம்மை விட்டு ஒருபோதும் ஓடிப்போகமாட்டேன் என்றெல்லாம் உறுதிமொழி கொடுத்த பேதுரு இடறி விட்டது ஏன்? பேதுரு இயேசுவை அதிகமாக நேசித்தாலும் அவர் தன்னம்பிக்கையில் சார்ந்து கொண்டு நேசித்தாரே ஒழிய, அவரது ஆவிக்குரிய கண்கள் மங்கியதாவே இருந்தன. இயேசுவின் நிமித்தம் அவர் சுமக்க வேண்டிய சிலுவை அவர் கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது. இது பேதுருவுக்கு மறைந்த சிலுவை. நமக்கு? ஆனாலும் அவரது தன்னம்பிக்கையைப் பார்த்து நீ பாறை உன்மேல் திருச்சபையைக் கட்டுவேன் என்று சித்தம் கொண்டாரோ, என்னவோ. ஆசாரியனின் காதை வெட்டியபோது ஏற்பட்ட துணிவு சீடர்கள் ஓடிவிட மறைந்து, மறைந்து இயேசுவின் பின்னால் சென்றபோது அவருக்குள் இருந்த பயம், தயக்கம் அரண்மனை முற்றம் யாவும் அவர் சிந்தையைக் குருடாக்கவே சாவுக்கும் தண்டனைக்கும் பயந்து இரு முறை சேவல் கூவு முன் மும்முறை மறுதலித்தார். (மாற்கு 14:72) இதனால் அவர் தன்னைத் தானே மறுதலித்தார். பேதுருவுக்கு வந்த சோதனை அவர் யேசுவின் மேல் வைத்த அன்புக்கு, வைராக்கியத்துக்கு, ஏன் அவர்மேல் வைக்கப்பட்ட சிலுவைக்கு வந்த சோதனை. சோதனையில் தோற்றாலும், சேவல் கூவிய சத்தம், அவர் உள்மனதைத் தட்டி எழுப்பிவிட்டது. அவர் யூதாசைப் போல ஓடிப்போய்ச் சாகவில்லை. மாறாக மனம் நொந்து அழுதார். (மத்தேயு 26:75) ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் ஏதோ ஒரு கணத்தில் சந்திக்கும் ஓர் உடைவு என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதுதான் முக்கியம்.

உயிர்த்தெழுந்த இயேசுவிடமிருந்து ஊழியத்தைப் பெற்றுக்கொண்ட பேதுரு இப்போது கோழையுமல்ல, பயந்தவருமல்ல. இறுதியில் தலை கீழாக சிலுவையில் அறையப்பட்டு மரிக்கும் அளவுக்கு, பேதுரு மறுதலித்த சிலுவை அவரை அரவணைத்துக்கொண்டது.

## சீமோனின் சிலுவை

நமக்கு ஏற்படுகின்ற எதிர்பாராத சம்பவங்களை நம்மால் ஜீரணிக்க முடிவதேயில்லை. அதிலும் நமக்குத் தேவையற்ற காரியங்களுக்குள் அகப்பட்டுவிட்டால் அவை சுமக்கக்கூடாத பாரமாகி விடுகின்றன. ஆனால் ஒவ்வொன்றுக்கும் பின்னே ஏதோவொன்று இருக்கும். நினையாத காரியங்களையும் தடைகளையும் அனுபவமாக ஏற்றுக்கொள்வோமேயானால் சுமக்கக் கூடாத பாரமும், சுகமாகவே இருக்கும். ஏனெனில் நமது வாழ்வில் எதுவுமே தற்செயலாகவோ, வீணாகவோ நடப்பதில்லை. சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவனைப் பிடித்து அவன்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து அவர் பின் சுமந்துகொண்டு போகும்படி செய்தார்கள். (லூக்கா. 23:26) தன் சொந்த ஊரிலிருந்து சீமோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காக வந்தானோ தெரியாது. இயேசுவைச் சிலுவையில் அறையச் சென்ற ஊர்வலத்தின் போது அவ்வழியே வந்தான். அந்தத் திரளான மக்கள் கூட்டத்தின் நடுவே போர் வீரர்களுக்கு சீமோனா கண்ணுக்குப் படவேண்டும்! சிலுவை சுமக்க உதவும்படி கட்டாயப்படுத்தப்பட்டான். ஏன் இதற்குள் அகப்பட்டேன் எனவும் அவன் நினைத்திருக்கக்கூடும். சீமோனுக்குக் கிடைத்த பாக்கியம் வேறு யாருக்குக் கிடைக்கும்? இயேசு தமக்காகவும் சிலுவையைச் சுமக்கிறாரே என்று தெரியாமல் அவனும் சுமந்தான். இயேசுவுக்கு மிக மிக அருகில் நிற்கவும், தோளிலிருந்த சிலுவை கைகளுக்கு மாறியபோது அவர் முக தரிசனத்தையும், கலங்கிய கண்களையும் கண்டிருப்பான். அவர் மூச்சுக்காற்றின் வெப்பத்தை உணர்ந்திருப்பான். தோளில் கசிந்த இரத்தம் அவன் மீது படிந்திருக்கும். ஏன் அவர் இதயத்துடிப்பைக் கூடக் கேட்டிருப்பான். மொத்தத்தில் ஆண்டவரின் துயரத்தில் பங்கெடுக்கும் நிலை சீமோன் வாழ்விலே எதிர்பாராத சம்பவம். இது சீமோன் தாங்கிய சிலுவை. நமது வாழ்வில்...? சற்று நிதானித்துப் பார்ப்போம்.

## பிலாத்துவின் சிலுவை

பிறரைப் பிரியப்படுத்தி, பிறர் தயவை இழந்து விடாதிருக்க, மற்றவர் தவறுகளுக்கு உடன்பட்டிருப்பது நாமா? பிலாத்துவா? நான்கு மணிநேரம் மட்டும் இயேசுவோடு இருந்ததால் பிலாத்து பிரபல்யமாகிவிட்டான். விசுவாச அறிக்கையிலும் அவன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. தான் சுமக்கவேண்டிய சிலுவைக்குப் பயந்த பிலாத்துவின் கோழைத்தனத்தின் விளைவு, இயேசு குற்றமற்றவர் எனத் தெரிந்திருந்தும் யூத தலைவர்களைச் சமாதானப்படுத்தவும் இராயனின் நட்புக்காகவும் அவனுக்குக் கிடைத்த நான்கு சந்தர்ப்பங்களிலும் பின் விளைவுகளுக்கு அஞ்சி நீதியை நிலைநாட்டத் தவறிவிட்டான். தண்ணீரை எடுத்து கையைக் கழுவி விட்டான். (மத்தேயு. 27:24) இது பிலாத்து பயந்த சிலுவை.

## வேறு சிலுவைகள்

அன்னாஸ், கைப்பாஸ் கூட சுய பாதுகாப்புக்காகவே இயேசுவைப் பலியாக்கத் துணிந்தனர். யாருக்கும் பயப்படாமல் "ஓசன்னாப் பாடிய ஜனங்கள்" ஆசாரியர்களால் தூண்டப்பட்டு, இயேசுவைக் கொலை செய்யும்படி கோஷமிட்டு இரத்தப்பழியை தம் சந்ததிமேல் ஏற்கும் அளவுக்குத் தள்ளப்பட்டது, இது அவர்கள் சிந்திக்கத் தவறிய சிலவை.

பெண்கள் பலவீனமானவர்கள் என்பது பொது அபிப்பிராயம். இருந்தாலும் அந்நாட்களில் அவர்கள் எதற்கும் முன்னுக்கு வருவதில்லை. வரவும் முடியாது. ஆனால் இயேசுவின் இரத்தக்கறை படிந்த முகத்தைத் துடைக்கத் துணிவுடன் சென்ற வரோணிக்காவைப் பராட்ட வேண்டும். விலைமதிப்பில்லாத வீரத்தின் பரிசு அந்தத் திருமுகம். யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம். இது துணிவுடன் சுமந்த சிலுவை.

சீடர்கள் பயந்து சிதறி ஓடியபோதும், பெண்கள் புலம்பியழுது அவர்பின் சென்றனர். "எனக்காக அழ வேண்டாம் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்." என்று கூறக்கேட்டும், கடைசிவரை அவருடனிருந்தனர். நியாயப் பிரமாணத்தை மீறிவிடாமல் ஓய்வு நாளில் பொறுமையுடனிருந்தபடியினாலேயோ என்னவோ, உயிர்த்த இயேசுவை ஒரு பெண்ணே முதலில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். இது பலவீனரைப் பலப்படுத்திய சிலுவை.

குழந்தை இயேசுவைத் தூக்கிக் கொண்டு மரியாளும் சூசையும் எகிப்துக்கு ஓடிச்சென்றபோது வழியில் கள்வரால் தாக்கப்பட்டதாகவும், கள்வர் தலைவனின் மகன் குழந்தை மேல் கைபோட மனமில்லாமல், "குழந்தைகளுக்குள் ஆசீவதிக்கப் பட்டவரே! என்மீது இரக்கம் காட்டப்பட வேண்டிய நேரம் ஒன்று வருமாயின் என்னையும், இந்த நேரத்தையும் மறவாதிரும்" என்று சொல்லி அவர்களை விட்டுவிட்டானாம். அவனே வலப்பக்கத்தில் அறையப்பட்ட கள்வன் என்றும் சிலுவையிலிருந்த இயேசு, என்னோடு கூடப் பரகதியில் இருப்பாய் என்று கூறியதாகவும், பாரம்பரியக் கதைகளும் உள்ளன. எது எப்படி இருப்பினும் இவன் மற்றவர்களை இரட்சித்தான், தன்னையும் இரட்சிக்கலாமே என மற்றக் கள்வன் இகழ, அந்த மரண நேரத்திலும் தன் தவறுகளை உணர்ந்து இயேசுவை நோக்கிப் பார்த்தான். அவரே தன் ஒரே நம்பிக்கை என நம்பினான். கரங்களை விரித்து ஒன்றுமில்லாதவராய்த் தொங்கிக்கொண்டிருந்த வேளையிலும் பாடுகளிலும் மரணத்திலும் அவரை விட வேறு நம்பிக்கை இருக்க முடியாது என உறுதியாக எண்ணி வாயினாலே அறிக்கையிட்டான். தன் இறுதி வினாடியைக்கூட அவன் வீணாக்க விரும்பவில்லை. பரலோக பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டான். (லூக்கா. 23:42) இது கள்வனை மாற்றிய சிலுவை. கடைசிக்கணம் கூட மனுஷ சீவியத்தில் மிக முக்கியமானது. மரணத்தருவாயிலும் அவரை நோக்கிக் கூப்பிடுகிற வரை அவர் கைவிட மாட்டார். அந்த நம்பிக்கை நமக்கும் உண்டா?

## மரியாவின் சிலுவை

"பெண்களுக்குள்ளே ஆசீவதிக்கப் பட்டவள்" என்று யாருக்குமே கிடைக்காத ஆசியைப் பெற்றுக்கொண்டவள் மரியாள். தன் வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் சந்தோஷத்தையா அனுபவித்தாள்? அடிமை என்று தன்னை ஒப்புக்கொடுத்தபோதே அவள் சுமக்கவேண்டிய சிலுவை வெளிப்படுத்தப் பட்டுவிட்டது. தொடர்ந்து அவள் சந்தித்தது எல்லாமே துக்கமும் துயரமும் தான். கன்னியாக இருந்து கர்ப்பம் தாங்கினாள். வீடில்லாமல் அலைந்தாள். மாடடுத்தொழுவத்தில் குழந்தையைப் பெற்றெடுத் தாள். பிள்ளையைக் காணிக்கையாகக் கொடுத்த போது சிமியோன் கூறிய வார்த்தைகள் (லூக்கா. 2:34-35) அவள் சுமக்கவேண்டிய சிலுவையை நிச்சயப்படுத்தியது. இயேசுவைக் காணாமல் அவரைத் தேடியபோதும், ஊழியத்துக்காக அவர் சென்றபோதும், தாயும் சகோதரரும் யார் என்ற விளக்கத்தைக் கேட்டபோதும் அத்தாயின் உள்ளம் எப்படி இருந்திருக்கும்? இதுமட்டுமல்ல, சிலுவையுடன் மகனைச் சந்தித்தபோதும், அவர் அனுபவித்த சிலுவையின் பாடுகளை நேரடியாகக் கண்ட போதும் தாகத்தைத் தீர்க்க முடியாமல் தவித்தபோதும் மரியாள் தான் சுமக்கவேண்டிய சிலுவையில் முற்றிலும் அறையப்பட்டிருப்பாள். முப்பத்து மூன்று வயது வாலிபனை அவள் மடியைப் பாடையாக்கிக் கிடத்தியபோது அப்பப்பா..... எத்தகையதொரு துன்பம்! ஏழு சோக வாள்கள் அவள் இதயத்தை ஊடுருவ உலக வாழ்வில் அவள் கண்ட சுகம்தான் என்ன? இது கடவுளின் தாய் தாங்கிய சிலுவை.

நாம் நமது சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின் செல்ல, மரணத்தை மகிமை உள்ளதாக மாற்ற தூய ஆவியின் கிருபையையும் வழி நடத்துதலையும் நாடவேண்டும். நம் வாழ்க்கைப் பாதையைக் கடந்து முடிக்கும் வரை இறையருள் தான் எம் தஞ்சம்.

நீ தூக்கிய சிலுவையை
துணை என நம்பினேன்
தூய பராபரமே
கல்வாரி மலைமேலே இரு
கள்வரின் நடுவினிலே
கர்த்தனே உயிர் துறந்தாய்
நீ தூக்கிய சிலுவையை
துணை என நம்பினேன்
தூய பராபரமே

---

# போர்க்களத்தில் என் ஜெபம் கேட்டு 8



இருக்கின்றீர் இருக்கின்றீர் இயேசுவே என்னோடு இருக்கின்றீர்
என்னை வழி நடத்துகின்றீர் உந்தன் வழி காட்டுகின்றீர்

கண்கலங்கி நான் தினமும் வாடும் போதெல்லாம்
என்னோடு நீர் இருக்கின்றீர்
நண்பர்கள் என்னை விட்டு விலகும் போதெல்லாம்
தோள் கொடுக்க நீர் இருக்கின்றீர்
என் நெஞ்சில் நீயிருக்க உன் நினைவாய் நானிருக்க
எந்தன் வழி நீ காட்டிட உந்தன் வழி நான் சென்றிட

வாழ்க்கை எனும் போர்க்களத்தில் தவிக்கும் போதெல்லாம்
என்னோடு நீர் இருக்கின்றீர்
பாவி என்று மற்றவர்கள் தூற்றும் போதெல்லாம்
அன்பாக நீர் அணைக்கின்றீர்
என்னோடு நீயிருக்க என்றென்றும் நான் மகிழ
உன்னோடு நான் வாழ்ந்திட என் வாழ்வு நீயாகிட

ஷாஜஹான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு தந்த நோவுகள்



நண்பா,
உன் சாவின் செய்தி
சவுக்கடியாய்
என் செவிகளில் விழுந்தது.

அனைத்தையும் ருசித்துப் பார்க்க
ஆசைப்பட்டவனே
மரணத்தையும் ருசித்துப் பார்க்கவா
பறந்துவிட்டாய்

சாவு உன்னைச் சந்திப்பதற்கு
நீ ஒன்றும் வாழ்ந்து முடித்தவன் அல்ல

சாவின் நிழல்கள்
உன்னைச் சூழ்ந்துகொள்ளும் என்று
நீ கூட நினைத்திருக்க மாட்டாய்!

நினைவுகள் கொப்பளிக்கின்றன!
கண்ணீரின் கதவுகள் திறக்கின்றன!

இந்த வாழ்க்கையை
என்ன சொல்லி ஆத்திரப்படுவது?

சங்கடத்தை ஏற்படுத்தும் சாவு
செத்துப்போவோருக்கோ சுகம்
எஞ்சி இருப்பவருக்கோ சோகம்.

உன்னோடு பேசிய நாட்கள்
அதிகாலைக் கனவுபோல்
அப்படியே பதிந்திருக்கிறது!

நான் அதிசயித்துப் பார்த்தேன்
உன் ஆளுமையை!
நான் தரிசித்து வியந்தேன்
உன் தோழமையை!

சாவு தந்த நோவுகளில்
இனியும் நொந்திருந்து பயனில்லை.
சாவுக்கு இனி நாம்
சாவுமணி அடிக்க
வாழ்வை இனிதாய்
வசப்படுத்திக்கொள்வோம்.

-- *அருட்திரு. தமிழ்நேசன் அடிகள்*

---

# கருணையும் துளிர்க்காதோ !?

நாட்டின் நடப்புகள் தனைநினைந்தோ
நாணியோ மறையுது வான்முகிலும்!?
காட்டினில் உறைந்திடும் விலங்கினமும்- மானிடன்
கடைநிலை கண்டே நகைக்கிறதோ!
வீட்டினில் முளைவிடும் முரண்பாடே
வெடித்திடும் பின்னர் கலவரமாய்! - மனக்
கோட்டையில் நெளிந்திடும் குரோதமதை
கொள்கைபாற் கொன்றிட வேண்டுமன்றோ!

உயிரெல்லாம் உணர்வின்றி மடிந்திடவே - உலைக்
களமாய் உள்ளமதை ஆக்கியதால்,
பயிர்பச்சை கூடநச் சாகிப்போச்சு! - இனி
பண்பாடு என்பதற்கு இல்லை ஒருபேச்சு!

துயில் இன்றி அலையும் மனங்களிலே - நல்ல
துணையாகி நெறிகாட்ட யாருமில்லை
பயில்வதும் பணங்கொள்ளும் ஆவல் என்றால் - இந்தப்
பாரினில் தர்மம் பகர்கனவோ?

சாந்தியைச் சிந்தையில் ஏந்தியவர் - வெறுஞ்
சருகாகி மூலையில் முடங்கிவிட,
அந்தைகளே முன்னால் நிற்கும் கோலம் - அதர்மத்தின்
கால் கொண்டு அவனியெலாம் ஊர்க்கோலம்!
மாந்திடும் மதவெறி, இனவெறியால் இந்த
மாநிலத்தில் பலன் ஏதும் உண்டோ? - அன்றைய
காந்தி மகான் காட்டிய நெறியினிலே - துளிக்
காருண்யம் துளிர்க்காதோ, காசினியில்!?

- முல்லையூர் ச. சசீதரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் இருந்து இயங்கும் ஐ.பீ.சீ. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச ஒலிபரப்பில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரித்தானிய நேரம் காலை 7.00 முதல் 10.00 வரை ஒலிபரப்பப்படும் "காலைக் கலசம்" நிகழ்ச்சியில், "இலக்கியத் தகவல் திரட்டு" என்ற பகுதி காலை 7.15 முதல் 8.00 மணிவரை சுமார் 15-20 நிமிடங்கள் ஒலிபரப்பாகின்றது. நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களால் தொகுத்து வழங்கப்படும் இந்த வாராந்த நிகழ்ச்சியின் எழுத்துப் பிரதி இதுவாகும்.

## கவிஞர் ஆ.மு.சி. வேலழகனின் "செங்காந்தள்" கவிதைத் தொகுதி

அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிகளைத் தவறாமல் கேட்டுக்கொண்டிருக்கும் அறிவார்ந்த நேயர்களுக்கு முதலில் என் அன்பு கலந்த வணக்கம். மீண்டும் இந்த வாரம் மற்றுமொரு காலைக் கலசம் நிகழ்ச்சியில் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய தினம் காலைக்கலச நேயர்களுடன் பகிர்ந்துகொள்ள இலங்கையிலிருந்து அண்மையில் வெளிவந்த மூன்று நூல்களைத் தெரிவு செய்திருக்கிறேன். கவிஞர் ஆ. மு. சி. வேலழகன் எழுதிய செங்காந்தள் என்ற மரபுக் கவிதைத் தொகுதி, வல்வையூரான் வ. ஆ. தங்கவேலாயுதம் எழுதிய வாழ்க்கையின் சுவடுகள், கவிஞர் த. துரைசிங்கம் எழுதிய பைந்தமிழ் வளர்த்த ஈழத்துப் பாவலர்கள் ஆகிய மூன்று நூல்களுமே அவையாகும்.

முதலில் ஆ. மு. சி. வேலழகன் எழுதிய செங்காந்தள் என்ற நூலைப் பார்வைக்கு எடுத்துக் கொள்கிறேன். இது கிழக்கிலங்கையின் திருப்பழு காமம் என்ற ஊரிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் பேரவை, இந்நூலைத் தமது 'எழுத்தகம்' என்ற பதிப்பகத்தினூடாக வெளியிட்டுள்ளார்கள். கவிஞர் ஆ. மு. சி. வேலழகன் மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் பேரவையின் முக்கிய உறுப்பினராகப் பணியாற்றி வருபவர். இவரது நாவலான சில்லிக் கொடி ஆற்றங்கரை ஏற்கனவே இதே வெளியீட்டாளர்களின் முதல் பிரசுரமாக வெளியிடப்பட்டிருந்தது. அண்மையில் கலாபூஷணம் விருது பெற்ற கவிஞர் ஆ. மு. சி. வேலழகன் ஏற்கனவே பத்து நூல்கள்வரை எழுதியிருக்கிறார் என்று அறிய முடிகின்றது.

துரதிர்ஷ்டவசமாக என் கையிலுள்ள இந்நூலை விட மூங்கில் காடு, சில்லிக்கொடி ஆற்றங்கரை ஆகிய இரண்டு நூல்களே என் பார்வைக்குக் கிட்டியிருக்கின்றன. ஆ. மு. சி. வேலழகனின் இயற்பெயர் ஆதிமுத்து சின்னத்தம்பி வேல்முருகு என்பதாகும். இவரது புனைபெயர் வழியாகவே இவர் இலக்கிய உலகில் பேசப்பட்டு வருகிறார்.

இவரது மூங்கில் காடு என்ற நூல் சென்னை இராயப்பேட்டையிலிருந்து The Parker நிறுவனத்தால் ஜூன் 2001ல் வெளியிடப்பட்டிருந்தது. கிழக்கிலங்கையின் மூத்த எழுத்தாளரான வேலழகனின் 28 சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்த இவரது படைப்புகளின் அடித்தளம், சமூகச் சீர்திருத்தங்களை வெளிப்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது. இவ்வகைப் பண்புகளை இவரது சிறுகதைகளில் அதிகமாகக் காணமுடிகிறது. கதைகள் வெவ்வேறு காலகட்டத்தில் மட்டக்களப்பு, கொழும்பு, தமிழகத்தில் மதுரை, இராயப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களிலிருந்து எழுதப்பட்டிருந்தாலும் அனைத்தும் மட்டக்களப்பு மண்வாசனையுடன், அந்த மண்ணின் கதைக் களங்களில் நகர்வதையே அவதானிக்க முடிகின்றது. வேலழகனின் சில்லிக்கொடி ஆற்றங்கரை என்ற நூல் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையினால் ஆவணி 2004ல் வெளியிடப்பட்டது. வெல்லாவெளிப் பகுதியையொட்டி இலங்கையின் உட்பகுதிக்குள் செல்லும் வைக்கிளல்ல, கொனா கொல்ல, உகனை, வண்டறந்தீவு, பன்னலகம என்னும் கிராமங்களில் 1940களில் சேனைப் பயிர் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த வேடுவச் சமூகத்தவரினதும் வெல்லாவெளிப் பகுதிகளில் விவசாயம் செய்துவந்த விவசாயச் சமூகத்தவரினதும் வரலாற்றுப் பின்னணியில் இந்நாவல் அமைந்துள்ளது.

வேலழகன் தன் இள வயதில் தான் கண்டு கேட்டறிந்த சுவைமிகு விபரங்களை இந்நாவலில் இழையோடச்செய்து நாவலைச் சுவையானதாக்கியுள்ளார் என்பதை அவதானிக்க முடிகிறது. சில்லிக்கொடி ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ் பேசும் வேடுவ இனம் விவசாயம் செய்து வாழ்ந்த படுவான்கரை விவசாய இனத்தினது செல்வாக்கினால் சில்லிக்கொடி ஆற்றங்கரைப் பகுதிக் காடுகளை வெட்டி களனி களாக்கி விவசாயச் சமூகமாகப் பரிணமிப்பதுதான் இந்நாவலின் கருவாகும். மட்டக்களப்பின் சமூக வரலாற்றின் ஒரு பகுதியை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ள அண்மைக்கால நாவல் இதுவாகும். இவ்விரண்டு நூல்களையும் தவிர ஆ. மு. சி. வேலழகன் தீயும் தென்றலும், சாதியா சதியா, உருவங்கள் மானிடராய், வேலழகன் அரங்கக் கவிதை கள், விழியும் வழியும், கோடாமை சான்றோர்க்கணி, இவர்கள் மத்தியில், கமகநிலா ஆகிய நூல்களையும் எழுதியிருப்பதாக அறிகிறேன்.

அண்மைக்கால அறுவடைகள் என்ற பெயரில் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் கொழும்பிலிருந்து தனது மீரா பதிப்பகத்தின் வாயிலாக மே 2001ல் நூலொன்றை வெளியிட்டிருந்தார். தொண்ணூறுகளில் வெளிவந்த ஈழச் சிறுகதைத் தொகுப்புக்கள் இருபதின் மீதானதொரு விமர்சனக் கண்ணோட்டமாக இந்நூல் அமைந்திருந்தது. இவற்றில் ஆ. மு. சி. வேலழகன் எழுதிய கமகநிலா என்ற ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புப் பற்றிய தனது விமர்சனத்தையும் ஆ. இரத்தினவேலோன் தனது நூலில் பதிவு செய்திருந்தார்.

இனி ஆ. மு. சி. வேலழகன் எழுதியுள்ள செங்காந்தள் நூல் மீதான பார்வையைப் பதிவு செய்வோம். இது ஒரு மரபுக் கவிதைத் தொகுதி. இதில் இவரது 32 கவிதைப் படைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெண்ணின் திண்மை என்ற படைப்பு ஒரு குறுங்காவியமாகும். சமூக ஏற்றத் தாழ்வுகள், போலித்தன்மைகள் என்பன இவரது கவிதைகளின் பாடுபொருள்களாகின்றன. தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றின்பால் கவிஞர் கொண்ட ஈடுபாடு கவிதைகளுள் இழையோடியுள்ளன.

நூலின் தலைப்பாக இடம்பெற்றுள்ள செங்காந்தள் என்ற பெயர் அழகிய ஒரு மலரைக் குறிக்கின்றது. பெண்களின் கைவிரல்களுக்கு உவமையாகத் தமிழ்க் கவிஞர்களால் எடுத்தாளப்படுவதாலோ என்னவோ அதிகமாக இம்மலரின் பெயர் தமிழ் இலக்கியத்தில் அறியப்பட்டுள்ளது. அழகிய மலரைத் தாங்கிய இச்செடியின் கிழங்குகள் மிகவும் நஞ்சானவை. இத்தொகுதியில் உள்ள பதினொராவது கவிதையாக செங்காந்தள் வருகிறது. கணவன் தன் மனைவியிடம் எதிர்பார்த்து ஏமாந்துபோனதை நினைந்து பாடும் புலம்பல் கவிதை இது. கவிதையின் எவ்விடத்திலும் செங்காந்தள் பற்றிப் பேசப்படவில்லை. ஆயினும் தலைப்பிட்டதன் வழியாக செங்காந்தள் மலரினதும் அதன் கிழங்கினதும் முரண்பட்ட குணவியல்புகளை தனது கவிதையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வைத்திருக்கிறார் கவிஞர். இந்நூலிலுள்ள பெரும்பாலான பாடல்களின் தலைப்புகளும் இத்தகைய ஒரு சுவாரஷ்யமான தேடலுக்கே வழியமைத்திருக்கின்றது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பெண்மையின் திண்மை என்ற குறுங்காவியம் கிராமியப் பெண்மையின் பொறுமையும், வீறுகொண்ட பாய்ச்சலையும் உணர்வுபூர்வமாகப் புலப்படுத்துகின்றது. மரபுக்கவிதைகளில் ஆங்காங்கே மட்டக்களப்பு மண்வாசனையைத் தரும் வகையில் பிரதேசச் சொற்களைச் சேர்த்திருக்கிறார். பொதுவாக, கவிஞர் ஆ.மு.சி. வேலழகன் தனது செங்காந்தள் என்ற இக்கவிதைத் தொகுப்பில் தன் ஆவேசத்தையும், ஆதங்கத்தையும், சீர்திருத்தச் சிந்தனைகளையும், சமூக அவலத்தையும் கவிதையாக்கிப் படைத்திருக்கின்றார்.

**இந்நூலின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் வாசகர்கள், பாக்கியம் சிவசோதி பதிப்பகம், வள்ளுவன்மேடு வீதி, திருப்பழுகாமம் 1. என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.**

❋ இரா. நாகலிங்கம் (அன்புமணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டு பிடித்தது யார்?

அமெரிக்காவைக் கண்டுபிடித்தது கொலம்பஸ் என்றே வெகுகாலமாகக் கூறப்பட்டு வருகிறது. 1492ல் தான் அவர் அங்கு சென்றார். ஆனால் அவருக்கு முன்பே ஃபீனிஷியர்கள், வைக்கிங்குகள், சீனர்கள், வெல்ஸ்கள் அங்கு சென்றிருப்பதாகத் தெரியவந்துள்ளது.


ஃபீனிஷியர்கள் கி.மு. 800ம் ஆண்டிலேயே அங்கு சென்றதாகவும், சீனர்கள் கி.பி. 459ல் மெக்சிக்கோவுக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது. ஐரிஸ் குருமார்கள் கி.பி. 570ல் அங்கு சென்றது பற்றிய புத்தகமும் கிடைத்துள்ளது. 10ம் நூற்றாண்டின் இறுதியில் நோர்வே மற்றும் டென்மார்க்கிலிருந்து சென்றிருப்பதாகவும் தெரிகிறது. லீஃப் எரிக்கன் தலைமையில் சென்ற வைக்கிங்குகள் குழு அந்நாட்டிற்கு வைன்லான்ட் என்று பெயரிட்டு அழைத்திருக்கிறார்கள். அங்கு அவர்கள் குடியேற்றத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்பட்ட போதிலும் அந்த இன மக்கள் யாரும் இங்கு காணப்படவில்லை. பூர்வ குடிகளால் ஒரு வேளை அழிக்கப்பட்டிருக்கலாம்.

வெல்ஸ் நாட்டவரான மாடக் 1170ல் அமெரிக்கா சென்றதாகவும் தெரிகிறது. டென்னசி பகுதியில் வெல்ஸ் நாட்டின் மத்திய காலக் கோட்டைகள் போன்று அமைந்துள்ள மூன்று கட்டிடங்கள் இன்றும் இருப்பது இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது. வெகுசிலரே




எஞ்சியுள்ள மான்டன் இன மக்களிடையே வெல்ஸ் மக்களின் இயல்புகள் காணப்படுகின்றன.

ஆயினும், கண்டுபிடித்த பெருமை கொலம்பசுக்கே உரியதாக இருக்கிறது. புதிய கண்டத்திற்கு பெயர் அமைந்ததோ இத்தாலிய வியாபாரியான அமெரிக்கா வெஸ்பூசி பெயரை ஒட்டியதாகும்.1492ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் திகதி ஸ்பெயினிலிருந்து புறப்பட்ட கொலம்பஸ் அக்டோபர் 12ம் திகதி கௌனஹானி என்ற தீவில் காலடியெடுத்து வைத்தார். அதற்கு சான் சல்வடோர் என புதிய பெயரிட்டார்.



*உலகப் புகழ்பெற்ற நாவலான 'போரும் அமைதியும்' (War and Peace) என்ற நூலை எழுதியவர் லியோ டால்ஸ்டாய். இந்நாவலில் சுமார் 500 கதாப்பாத்திரங்கள் அமைந்துள்ளன. உலகப் புகழ்பெற்ற இந்த எழுத்தாளர் தமது முதிய வயதில் கவனிப்பார் இல்லாமல் ஒரு புகையிரத நிலையத்தில் இறந்து கிடந்தார் என்பது பெரும் சோகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒளி ஏற்றுவோம்

ஒளி மனித வாழ்வுக்குத் தேவையான ஒன்று. ஆனால், அந்த ஒளி தேவைக்கு அதிகமாகக் கிடைக்கின்றபோது அதனாலும் பல பாதிப்புகளே தோன்றுகின்றன. ஒளியின் முக்கியத்துவம் ஒளியுள்ள இடத்தில் உணரப்படுவதில்லை. மாறாக, இருள் உள்ள இடத்தில்தான் உணரப்படுகிறது. பௌத்த மதத்தினர் வருடாவருடம் வெசாக் தினத்தைக் கொண்டாடி வருகின்றனர். இத்தினத்தில் வெசாக் வெளிச்சக் கூடுகளைப் பார்ப்பதற்கு, மக்கள் பகற்பொழுதைச் செலவழிப்பதில்லை. ஏனெனில், பகற் பொழுதில் அவை அழகைக் கொடுப்பதில்லை. அந்த வெளிச்சக்கூடுகளில் இருக்கும் புத்த பிரானின் வாழ்வியல் சரிதமும் தெரிவதில்லை. ஆகவே, மக்கள் பகற் பொழுதில் வெளிச்சக் கூடுகளைப் பார்ப்பதற்குச் செல்வதில்லை. இவையெல்லாம் எப்பொழுது தெளிவாகத் தெரிகிறது என்றால், இருள் சூழ்ந்த பொழுதில் தான் அந்த ஒளி விளக்குகள் அழகைக் கொடுக்கின்றன. இதனைப் பார்ப்பதற்குப் புடைசூழ்ந்து, நடுநிசிப் பொழுதிலும் பிரயாணம் செய்வோர் ஏராளம். இருள் நிறைந்த ஓர் அறை, நீண்ட காலம் பாவனை அற்று இருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அந்த அறைக்குள் இருக்கும் அழுக்குகள், தூசுகள், துரும்புகள், மேடுகள், பள்ளங்கள் என ஒன்றுமே தெரியாது. ஆனால் அந்த அறைக்குள் ஒரு சிறிய ஒளியை ஏற்றும் போது அதற்குள் இருக்கும் அனைத்தும் தெளிவாகத் தெரியும். இவ்வாறு தெளிவாகத் தெரியும்போது மட்டுமே நாம் அவற்றைச் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்த முடியும். நாங்கள் ஒவ்வொருவரும் இறைவன் வாழும் ஆலயங்கள். இந்தக் கடவுள் வாழும் ஆலயமாகிய எமது உடல் எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும். இருள் நிறைந்த அறையைப் போல நாமும் காணப்பட்டால் அதற்குள் ஒளியை ஏற்ற வேண்டும். ஒளியை எமக்குள் ஏற்றும்போது எமக்குள் காணப்படும் அழுக்குகள் தெளிவாகத் தெரியும். இங்கு முக்கியம் என்னவென்றால் எமக்குள் இருக்கும் அழுக்குகள் எமக்குத் தெரிவதில்லை. தெரிந்தால் அவற்றை அகற்றுவோம். ஆகவே எமக்குள் ஒளி ஏற்ற வேண்டியது எமக்குள்ள தார்மீகக் கடமையாகும்.

இந்த ஒளியை ஏற்றுவது எப்படி? ஒளி ஏற்றுவது என்பது எமக்குள் ஊடுருவிப் பார்த்தல் ஆகும். ஊடுருவிப் பார்த்தல் என்பது, மௌனமாக இருத்தல் என்ற நிலையால் உண்டாகிறது. தியானம் மூலம் மனத்துறவு அடைகின்றபோது மட்டுமே எமக்குள் ஒளியேற்ற முடியும். ஒளியேற்றும்போது மட்டுமே தீய குணங்களை அகற்ற முடியும். அப்போதுதான் இறைவனைச் சுமந்து செல்லும் ஆலயமாக நாம் திகழ முடியும். மனத்துறவு மேற்கொள்ளாமல் வெளியரங்கமாகச் செய்யும் எந்தச் செயலுமே போலியானதே; செபிப்பது, ஆர்ப்பரித்துப் பாடுவது, கைத்தாள ஓசையுடன் இறைபுகழ் சொல்வது அத்தனையும் அர்த்தமில்லாதவை. இவை எப்போது அர்த்தம் பெறுகின்றது என்றால் மனத்துறவு என்ற நிலையில் எமக்குள் இறை ஒளியைப் பாய்ச்சுகின்றபோது மட்டுமே. அப்போதுதான் மறையான குணங்களை இனங் கண்டு அகற்றுவதோடு, நேரான குணங்களை வளர்த்துக்கொள்ள முடியும்.

- யாழ்.ராதவல்லி -

*இந்திய நாட்டுக்குக் கடல் வழியைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட கொலம்பஸ் கண்டுபிடித்தது அமெரிக்காவை. அவர் பயணம் செய்த கப்பலின் பெயர் சாந்த மரியா. அவருடன் பயணம் செய்த மற்ற இரு கப்பல்களின் பெயர்கள் நினா மற்றும் பின்டா.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
27 - 01 - 1977



உதிர்வு
04 - 02 - 2007

## விண்ணுலகில் விஜி

விதியே உன்னை நாம் கேட்கிறோம் விழி ஒன்றாவது உனக்கு உண்டா?
விளையும் நிலத்தை ஏன் தரிசாக்கினாய்? விளையுமுன் ஏன் கதிரைப் பறித்தாய்?
விஜியின் கனவுகளை ஏன் பறித்தாய்? -- எம் விழி காயவில்லை ஒரு வருடம்
விடியும் வரை அழுதும் பயனில்லை விளங்கவில்லை விதியே போய்த் தொலை
விண்ணில் எம் விஜி பிறந்தான் என்று விளங்கியதால் இதை எழுதுகின்றோம்
விண்ணின் மைந்தன் இயேசு சொன்னான் விலையற்றது ஆத்மா என்று – அன்று
விடுதலை, இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் விஜி களித்து மகிழ்ந்து மறைந்த நாள்
விஜி உன்னை நாம் சந்திப்போம் விண்ணிலே விதி முடிந்து இவ்வுலகை விட்டு
விண்ணுலகில் நாமெல்லாம் பிறக்கும்போது

- வின்சன் இளையதம்பி குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30- 03 - 2008

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 63

**(எண்ணிக்கை 2:1–51)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் கூறியது, இஸ்ரயேல் மக்களில் ஒவ்வொருவரும் தங்கள் கொடி, மூதாதையர் வீட்டுச் சின்னங்கள் இவற்றின்படி பாளையமிறங்குவர்; எல்லாப் பக்கத்திலிருந்தும் சந்திப்புக் கூடாரத்தை நோக்கியவாறு........................................ இறங்குவர். கிழக்கே கதிரவன் உதயத்தை நோக்கிப் பாளையமிறங்கவேண்டியவர் யூதாவின் கொடியையுடைய பாளையத்தவரும் அவர்கள் அணியினரும் ஆவர். யூதாமக்களின் தலைவன்..............................; இவன் அணியினர் தொகை எழுபத்து நாலாயிரத்து அறுநூறு. அதனையடுத்து பாளையமிறங்கவேண்டியவர் இசக்கார் குலத்தார்; இவர்களின் தலைவன் நெத்தனியேல். இவன்........................................மகன்; இவன் அணியினர் தொகை ஐம்பத்து நாலாயிரத்து நானூறு. அடுத்து செபுலோன் குலம்; தலைவன் எலியாபு. இவன் அணியினர் ஐம்பத்தேழாயிரத்து நானூறு. மொத்தம் ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூறு. இவர்கள்............................................ஆக அணிவகுத்துச் செல்வர். தெற்கே பாளையமிறங்கவேண்டியவர் ரூபனின் கொடியுடைய பாளையத்தவரும் அவர்களைச் சார்ந்த அணியினரும் ஆவர்: ...........................................மக்களின் தலைவன் எலிட்சூர், இவன் செதேயூரின் மகன்; இவர்கள் தொகை நாற்பத்தாறாயிரத்து ஐநூறு. இவனையடுத்துப் பாளையமிறங்க வேண்டியவர் சிமியோன் குலத்தார்; தலைவர் செலுமியேல். தொகை................................................ அடுத்து காத்து குலம்; காத்து மக்களின் தலைவன் எல்யாசாபு. இவன் இரகுவேலின் மகன். அணியினர் நாற்பத்தாறாயிரத்து அறுநூற்றைம்பது. மொத்தம் ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து நானூற்றைம்பது; இவர்கள் இரண்டாவதாக அணிவகுத்துச் செல்வர். ............................................ பாளையமிறங்க வேண்டியவர் எப்ராயிம் கொடியுடைய பாளையத்தவரும் அவர்கள் அணியினருமாவர். தலைவன் எலிசாமா. மொத்தம் ஒரு இலட்சத்து எண்ணாயிரத்து நூறு. மூன்றாவதாக இவர்கள் செல்வர். வடக்கே பாளைமிறங்க வேண்டியவர் .................................................. கொடியுடைய பாளையத்தவரும் அவர்களைச் சார்ந்த அணியினருமாவர். மொத்தம் ஒரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூறு. இவர்கள் இறுதியாகச் செல்வார்கள். ஆனால், இஸ்ரயேல் மக்களுள் ...................................... எண்ணப்படவில்லை. ஆண்டவர் கட்டளையிட்டபடி மக்கள் செய்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கொடிகளைச் சுற்றிப் பாளையமிறங்கி தங்கள் ...................................., மூதாதையர் வீடுகளின்படி அணிவகுத்துச் சென்றனர்.

**விடைகள் : ரூபன், குடும்பங்கள், தாண், லேவியர், நக்சோன், சூவாரின், முதலாவதாக, மேற்கே, 59300, பாளையம்.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 63

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. ஒரு நிமிடத்தில் பூமி தன் சுழல் பாதையில் கடக்கும் தூரம்
   (950 மைல்கள், 800மைல்கள், 1000மைல்கள்)

2. அணுக் கதிர்வீச்சினாலும் அழியாத உயிரினம்
   (தேனீ, பாம்பு, கரப்பான்)

3. குருவுக்குக் கட்டை விரலைக் காணிக்கையாகக் கொடுத்தவன்
   (கர்ணன், ஏகலைவன், அருச்சுனன்)

4. தமிழில் இராமாயணத்தை எழுதியவர் கம்பர், இந்தியில் எழுதியவர்
   (வால்மீகி, துளசிதாசர், காளிதாசர்)

5. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால்........................?
   (கள்ளனுக்குக் கோபம், குருடனுக்குக் கோபம், முடவனுக்குக் கோபம்)

6. தமிழ் கற்றான் என்பது
   (2ம் வேற்றுமைத் தொகை, 4ம் வேற்றுமைத் தொகை, 5ம் வேற்றுமைத் தொகை)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 63
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 61 விடைகள்

மோசேயுடன், ஆரோனும், ரூபன், செபுலோன், அகியசேர், மூதாதையர், கூட்டமைப்பு, தலைப்பேறான, இருபதோ, 45650

## அறிவை வளர்ப்போம் - 61 விடைகள்

1) அண்டார்டிக்கா 2) பீஜிங் 3) ஸப 4) தென் ஆபிரிக்கா
5) வில்லியம் கோபலாவ

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- பவளமோகன் பவளநேசன்
  சின்ன முகத்துவாரம்,
  அக்கரைப்பற்று - 09.
- அந்தோனிமுத்து தயோதினி
  தேவகிராமம், அலிகம்பை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 13 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  விசுவாசம் பிள்ளை
  - நிலுசிகா
  31 பார் வீதி,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு** - 200/=
  கனிஸ்ரோ கிரகரி
  C/o Sகிரகரி,
  கிரகரிலேன்,
  மெயின் வீதி, கல்முனை
- **3ம் பரிசு** - 100/=
  கு. டினுஷா
  57, பாத்திமா வீதி,
  திருகோணமலை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

## பெப்ரவரி - 2008

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 6.10 மணி**

| | | |
|---|---|---|
| நாள்:- | 02, 03, 04, 05 | - அருட்தந்தை. அன்டன் டெரன்ஸ் றாகல் |
| | 06, 07, 08 | - அருட்தந்தை. பிறைனர் செலர் |
| | 16, 17, 18, 19 | - அருட்தந்தை. டக்ளஸ் ஜேம்ஸ் |
| | 20, 21, 22 | - அருட்சகோ. S.A.I மத்தியு F.C |

**சிறுவர் உலகம் - மாலை 6.30 மணி**

நாள்:- 12, 26

கதையும் கருத்தும், பாடல், போட்டி இன்னும்...

**புதிய உலகம் - மாலை 6.30 மணி**

நாள்:- 10, 24

வழிபாடு, சிந்தனை உரை, நாடகம், செய்திகள்,
போட்டி, பாடல்கள் இன்னும்...

குறிப்பு :-

பெப்ரவரி 6ம் திகதி திருநீற்றுப்புதன், அன்றும் தொடர்ந்து வரும் தவக்கால வெள்ளிகள் தோறும் சிறப்பு நிகழ்ச்சிகள் மாலை 5.00 மணிக்கு ஒலிபரப்பாகின்றன.

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org